
செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

மணவை முஸ்தபா





NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-3-3

அண்ணா நூற்றாண்டு நூலகம்

ANNA CENTENARY LIBRARY

DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/153-%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%B5%E0%AF%88-%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%AA%E0%AE%BE--1935

செந்தமிழ்சிற்பிகள்

மணவை முஸ்தபா (1935 - 2017)



அறிமுகம்

மணவை முஸ்தபா அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு அருப்பெரும் பணியாற்றிய தமிழ் அறிஞர். இவர் அறிவியல் தமிழ்த் தந்தை என்றும் அறியப்படுகிறார். அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், கணினி துறைச் சார்ந்த 8 கலைச் சொல் அகராதிகளை வெளியிட்டவர். அறிவியல் தமிழ் அறக்கட்டளை என்னும் நிறுவனத்தை நிறுவி அறிவியல் தமிழ் பணியை தொடர்ந்தவர்.

வாழ்க்கைக் குறிப்பு

1935 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 15 ஆம் தேதி மீராசா ராவுத்தரின் மகனாகப் பிறந்தார் முஸ்தஃபா. திண்டுக்கல் அருகே உள்ள பிலாத்து என்ற சிறிய கிராமம் தான் இவரது சொந்த ஊர். இவர் மணப்பாறை அருகில் உள்ள இளங்காகுறிச்சியில் 15 சூன் 1935ஆம் நாள் பிறந்தார்.

ஆற்றிய பணிகள்

திரைப்படத் தணிக்கை குழு உறுப்பினராக 1977 முதல் 1986 முடிய பணியாற்றினார். மீரா அற நிறுவனம்" தலைவராகவும், எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத் தமிழ் வளர்ச்சித்துறை ஆலோசகராகவும், 2006 - 2009 வரை தமிழ்நாடு அரசின் அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவராக பொறுப்பு வகித்தார். 'அறிவியல் தமிழ் அறக்கட்டளையின்" தலைவராகவும், தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினரகவும், செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் சென்னை உறுப்பினராகவும் இருந்தார்.

எழுதிய நூல்கள்

இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்

மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்

கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி

கணினி களஞ்சிய பேரகராதி

மருத்துவக் களஞ்சிய பேரகராதி

செம்மொழி உள்ளும் புறமும்

விழா தந்த விழிப்பு

சிறுவர்க்கும் சுதந்திரம்

தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்

பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்

அன்றாட வாழ்வில் அழகு தமிழ்

பெற்ற விருதுகளும் சிறப்புகளும்

கலைமாமணி விருது (1985) - 'திரு.வி.க." விருது (1989) 'எம்ஜி.ஆர்." விருது (1996) 'தமிழ் தூதுவர்' விருது (1994), 'அறிவியல் தமிழ்ச் சிற்பி' விருது (1987) 'அறிவியல் தமிழ் வித்தகர்" விருது (1995) 'அறிவியல் தமிழேறு" விருது (1996) 'ராஜா சர் முத்தையா செட்டியார் விருது" (1995) "முத்தமிழ் வித்தகர்" (1996) 'தந்தை பெரியார் விருது" 'அறிவியல் தமிழருவி" விருது (1998) 'சேவா ரத்னா" விருது (1998) 'சான்றோர் விருது" (2000) 'மாமனிதர்" விருது (1999) 'அறிவியல் தமிழ் தந்தை" விருது (2003).

(😊)(😊)(😊) @@@@@ (😊)(😊)(😊)

https://keetru.com/vizhippunarvu/may06/manavai_mustafa.php

அறிவியல் தமிழ்த் தந்தை
மணவை முஸ்தபாவுடன் - நேர்காணல்

சந்திப்பு : கோவை ஞானி

மணவை முஸ்தபா அறிவியல் தமிழ் வளர்ச்சி தொடர்பான பணிகளில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்னை ஈடுபடுத்தி வருபவர். அறிவியல் தமிழுக்காகத் தன் வாழ்கையையே அர்ப்பணித்தவர். இதுவரை அறிவியல் தொழில்நுட்பம், மருத்துவம், கணினி துறைச் சார்ந்த 8 கலைச் சொல் அகராதிகளை வெளியிட்டுள்ளார். தொடர்ந்து பல துறைகளில் கலைச் சொல் அகராதிகளை வெளியிட திட்டமிட்டு பணியாற்றி வருகிறார். தமிழால் முடியும் என்ற தலைப்பின் கீழ் தமிழகத்தின் அனைத்து சட்டக்கல்லூரி மாணவர்களையும் பங்குபெறச் செய்து கோவை அரசு சட்டக்கல்லூரி மாணவர்கள் நடத்திய தமிழ் மாதிரி நீதிமன்றப் போட்டியின் துவக்க விழா கருத்தரங்கிற்கு சிறப்புரையாற்ற கோவை நகருக்கு வருகை தந்த மணவை முஸ்தபாவுடன் கோவை ஞானி அவர்கள் நடத்திய நேர்காணலிலிருந்து சில பகுதிகள்...

கல்லூரிக் காலத்தில் நச்சினார்க்கினியர் என்ற பெயரோடு இருந்த தாங்கள் மணவை முஸ்தபா என்ற பெயருக்கு மாறியது ஏன்? எப்போது?



அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தலைமையில் விவாத அரங்கம் நடைபெற்றது. மாணவர்கள் ஒரு அணியாகவும் ஆசிரியர்கள் ஒரு அணியாகவும் விவாதிக்க ஏற்பாடு. மாணவர்கள் அணிக்கு நான் தலைமை தாங்குகிறேன். விவாதத் தலைப்பு இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் வளர்ந்திருக்கிறதா? என்பதாகும். ஆசிரிய அணியினர் வளர்ந்திருக்கிறது என்றும் மாணவ அணியினர் வளரவில்லை என்றும் வாதிட்டனர். இறுதி வாக்கெடுப்பில் வளரவில்லை என வாதிட்ட மாணவ

அணியினர் பெறும் வெற்றி பெற்றனர். இது பேராசிரியர் தெ.பொ.மீ.அவர்கட்கு பெரும் வியப்பளித்தது.

“அதிலும் பெருக்கத்தை வளர்ச்சியாகக் கருத முடியாது. மாறும் இயல்பு கொண்ட மனித வாழ்க்கைக்கு மாறாத உண்மைகளை உள்ளடக்கமாகக் கொண்ட இலக்கியங்களே வாழும் வெற்றியினைப் பெற முடியும். அத்தகைய இலக்கியங்களே வளர்ச்சிக்கு அடிப்படையாகும். அத்தகு அறிவாற்றல் மிக்க இலக்கியங்கள் அதிகம் உருவாகாது. வெறும் உணர்ச்சிக்கு இரைபோடும் இலக்கியங்கள் வளர்ச்சியைக் குறிக்காது. வேண்டுமானானல் அவை பெருக்கத்தைக் குறிக்கலாம். அது வளர்ச்சியாகாது” என நான் எடுத்து வைத்த வாதம் அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தம் உரையில் எடுத்து வைக்கும் வாதத் திறன் மாணவ சமுதாய எண்ணத்தை பிரதிபலிப்பதாக இருக்கிறது. எனவே இன்று முதல் முஸ்தபாவை நம்மிடையே வாழும் நச்சினார்க்கினியராகக் காண்போம் எனக் கூறி, எனக்குப் புதுப் பெயரைச் சூட்டினார். அன்று முதல் அப்பெயர் நிலை பெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் படிப்பு முடிந்து வெளியேறும் போது, பேராசிரியர் தெ.பொ.மீ என்னை அழைத்து, இனிமேல் நீ முஸ்தபா என்ற பெயரால் அழைக்கப் படுவதையே நான் விரும்புகிறேன். இனி, நீ உன் சொந்தப் பெயரையே பயன்படுத்த வேண்டும். ஏன் என்று கேட்கக் கூடாது. சமயம் வரும்போது, நானே அதற்கான காரணத்தைச் சொல்வேன் எனக்கூறி கட்டளையிட்டார். அவ்வாறே நானும் நடந்து கொண்டேன். பேராசிரியர் எதைச் சொன்னாலும், செய்தாலும் என் நன்மைக்காகவே என்ற நம்பிக்கை எப்போதும் எனக்கு உண்டு.

நான் மணப்பாறையில் பிறக்காவிட்டாலும் ஐந்து வயது முதல் அவ்வூரில் வளர்ந்தவன். என் பள்ளி வாழ்க்கையில் பல்வேறு வகைகளில் எழுத்து, பேச்சு மற்றும் இலக்கியத் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் பயிற்சிப் பாசறையாக, குறிப்பிடத்தக்க நிலைக்களமாக மணவை இருந்ததால் நன்றியுணர்வோடு என் பெயரை மணவை முஸ்தபா என வைத்துக் கொண்டேன்.

என் பெயரை மாற்றச் சொன்னதன் இரகசியத்தை என் குருநாதர் தெ.பொ.மீ அவர்கள் தான் மறைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்புதான் (45 ஆண்டுகளுக்குப் பின்) என்னிடம் வெளிப்படுத்தினார்.

நான் ஆரம்பத்தில் உன் சிந்தனைச் செயல்பாடுகளின் அடிப்படையில் உன் எதிர்காலத் தமிழ்ப் பணிகளைப் பற்றி நிறைய கற்பனை செய்திருந்தேன். நான் எண்ணியதை விடச் சிறப்பாக உன் தமிழ்ப் பணி அமைந்துள்ளது. அதிலும் நீ முனைப்புடன் செய்து வரும் காலத்திற்கேற்ற அறிவியல் தமிழ்த் தொண்டின் பெருமை இஸ்லாமிய சமுதாயத்தின் பெருமையாக அமையவும், ஒரு முஸ்லீம் தமிழுக்காக இவ்வளவு பாடு படும்போது நாமென்ன தமிழுக்குச் செய்திருக்கிறோம் என ஒரு நிமிடம் மற்றவர்கள் எண்ணிப் பார்க்க வாய்ப்பாக அமைய வேண்டும் என்பதற்காகத்தான் நச்சினார்க்கினியன் என்ற பெயரிலிருந்து (மணவை) முஸ்தபா எனும் பெயருக்கு மாறச் சொன்னேன், என்று கூறிய போது தன் மாணவன் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் தொலை நோக்கும் என்னை நெஞ்சுருகச் செய்துவிட்டது. இதுதான் என் பெயர்மாற்ற வரலாறு.

தமிழில் கலைச் சொல்லாக்கத்திற்கே தங்கள் வாழ்வை ஒப்படைத்துக் கொண்டதற்கான காரணம் அல்லது காரணங்கள் என்ன?

பல்கலைக் கழகத் தேர்வு முடிவு வெளிவந்த கையோடு கல்லூரி ஆசிரியர் பணி வேண்டி விண்ணப் பிக்க, ஒருவார காலத்திற்குள் சேலம் அரசினர் கல்லூரியில் பணியாற்ற அரசு ஆணை கிடைத்தது. என் குருநாதர் பேரா. தெ.பொ.மீ.யிடம் ஆசி பெற சென்றேன். ஆசி வழங்கியதோடு அங்கு நடைபெறும் பயிற்சி மொழி பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு செல்லுமாறு பணித்தார். நானும் ஆர்வத்துடன் கலந்து கொண்டேன்.

கருத்தரங்கில் உரையாற்றி யவர்கள் பயிற்சி மொழியாக ஆங்கிலமே தொடர்வது நல்லது. ஏனெனில், தமிழில் போதிய அறிவியல் நூல்கள் இல்லை. இருப்பவையும் சரியானபடி எழுதவோ, மொழி பெயர்க்கவோ படவில்லை. தமிழில் கலைச் சொற்களை உருவாக்கிப் பயன்படுத்தாது பெரும்பாலும் ஆங்கிலக் கலைச் சொற்களின் ஒலிபெயர்ப்பாகவே பயன்படுத்தப் படுகிறது. ஏனெனில், தமிழில் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்க இயலாத நிலை. எனவே, தமிழ்நூல் கற்க மாணவர்கட்கும் பெற்றோருக்கும் ஆர்வமில்லை என்றெல்லாம் பேசினார்கள் பேராசிரியர் ஒருவர் பேசும்போது “தமிழில் அறிவியலைத் திட்ட நுட்பமுடன் கற்பிக்கவே முடியாது. அப்படியே கற்பித்தாலும் தமிழில் அறிவியல் கற்ற பட்டதாரிக்கு இங்கு மட்டுமல்ல, இந்தியாவில் - ஏன் உலகில் வேறு எங்குமே வேலைவாய்ப்பு இல்லாத போது அவன் ஏன் தமிழில் அறிவியலைக் கற்க வேண்டும்.” என்றெல்லாம்

ஆவேசமாகப் பேசியபோது, அவர் வாதத்தை என்னால் ஏற்க மட்டுமல்ல, கேட்டுத் தாங்கவே முடியவில்லை.

மிகவும் உணர்ச்சி வயப்பட்டவனாக கோபம் கொப்பளிக்க, போதும் என உரக்கக் கூறியபடியே எழுந்தேன். நான் எழுந்த வேகத்தையும் கூறியதையும் கேட்ட பேசிக்கொண்டிருந்த பேராசிரியர் அச்சமடைந்தவராக பேச்சை இடையிலேயே நிறுத்தி அமர்ந்தார். விரைந்து சென்று ஒலி பெருக்கி முன்னால் சென்று தலைவரின் அனுமதியோடு பேசுகிறேன் என்று நானாகவே அறிவித்துக் கொண்டு தமிழில் முடியுமா? முடியாதா? என வாதிடும் உரிமையும் தகுதியும் இங்கு பேசியவர்கட்கு உண்டா என்பது அடிப்படையான கேள்வி. இவர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் படித்து, ஆங்கிலத்தில் சிந்தித்துச் செயல்படும் இவர்களைவிட, தமிழில் கல்வி கற்று, தமிழில் சிந்தித்துச் செயல்படுபவர்கள் எங்களுக்கே இந்தத்தகுதியும் உரிமையும் உண்டு. தமிழில் எந்தத் துறைக் கல்வியையும் கற்பிக்க முடியும்.

இன்னும் சொல்லப் போனால் தமிழில் எப்படிப்பட்ட அறிவியல் நுட்பச் செய்தியாக இருந்த போதிலும் அதைத் தெளிவாக சொற்செட்டோடும் பொருட் செறிவோடும் இயன்றால் இலக்கிய மெருகோடும் சொல்ல முடியும் என்பதை வெறும் சொற்களால் விளக்கம் சொல்லாமல் செயல் வடிவில் நிறுவிக் காட்ட, இன்று முதல் என் வாழ்க்கையை நான் முழுமையாக ஒப்படைத்துக் கொள்கிறேன். அதனை உறுதிப்படுத்தும் வகையில் இப்போது எனக்குக் கிடைத்திருக்கும் அரசுக் கல்லூரி ஆசிரியர் பணியை இப்போதே விட்டுவிடுகிறேன் என ஆவேசமாகக் கூறியவாறே சட்டைப்பையிலிருந்த கல்லூரி ஆசிரியர் பணிக்கான அரசு ஆணையை எடுத்து மேடையிலேயே கிழித்துப் போட்டேன். இதைக் கண்ட கூட்டத்தினர் உணர்ச்சி வயப்பட்டவர்களாக எழுந்து நின்று கைதட்டி ஆர்ப்பரித்தனர். இனி ஒருவரையும் பேசவிடக் கூடாது என்ற எண்ணத்தில் இத்துடன் இக்கூட்டம் முடிவடைகிறது என அறிவித்துவிட்டு திரும்பினேன். கூட்டம் அதை ஆமோதிக்கும் வகையில் கலைந்து சென்றது.

அதே சமயம் என் முதுகில் யாரோ வேகமாகத் தட்டுவது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தபோது மிகுந்த கோபத்துடன் என் குருநாதர் தெ.பொ.மீ. நின்று கொண்டிருந்தார். எல்லாவற்றையும் நீயாகவே முடிவு செய்து கொள்கிறாயா? உணர்ச்சிவசப்பட்டு என்ன காரியம் செய்தாய்? எப்படிப்பட்ட வேலை தெரியுமா? நாளை கல்லூரிக் கல்வி இயக்குநராகக் கூட வர முடியும். உணர்ச்சிவசப்பட்டு, அவசரமுடிவாக அரசுப் பணி ஆணையைக் கிழித்துப் போட்டு, உன் எதிர்கால வாழ்வுக்கு நீயே தடை போட்டுக் கொண்டாயே, ஏன்? என்று மிகுந்த கோபத்துடன் கேட்டார்.

நான் சற்று நிதானத்துடன் அவர் கோபத்தைக் குறைக்கும் வகையில் அவரிடம் ஐயா, தமிழ் வளர்ச்சிக்கு நிறைய செய்யவேண்டும், கடுமையாக உழைக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதே தவிர, அதற்காக எந்தப் பணியை முதலில் கையில் எடுப்பது, அதை எங்கிருந்து தொடங்குவது என்பதற்கான வழிமுறைகளோ திட்டமோ இல்லாதவனாக, ஏதும் தெரியாதவனாக இருந்தேன். இப்போது அதற்கான வழிமுறை எது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. அறிவியல் தமிழ்பணி தான் இனி என் வாழ்நாள் பணியாக இருக்கும். இதற்குக் காணிக்கையாக இப்போது கிடைத்திருக்கும் கல்லூரி ஆசிரியர் பணியை விட்டுவிட்டதாகத் தாங்கள் கருதி, என் எதிர்கால அறிவியல் தமிழ்ப் பணிக்கு உறுதுணையாயிருந்து வழி காட்ட வேண்டும் என வேண்டி நின்றேன். என் மனத்திட்டம் அவருக்கு மகிழ்ச்சியளித்திருக்க வேண்டும். கடுமை குறைந்தவராக உன் விருப்பப்படியே செய். என் ஆசிர்வாதம் உனக்கு எப்போதும் உண்டு எனக்கூறி என் தோளைத் தட்டினார். அந்த நிமிடம் முதல் அறிவியல் தமிழ் பற்றி சிந்திக்கலானேன். எதிர்காலத்தில் ஆற்றவிருக்கும் அறிவியல் தமிழ்ப்பணி பற்றி மிக ஆழமாக ஒருவாரகாலம் இரவுபகலாக சிந்தித்தேன்.

தமிழில் அறிவியல் நூல்கள் பெருமளவில் வெளிவராமைக்கான அடிப்படைக் காரணங்களைப் பற்றி ஆராய்ந்தேன். அறிவியல் பொருளறிவுடன் தமிழறிவும் எழுத்தாற்றலும் மிக்கவர்கள் பலபேர் இருந்தபோதிலும், அத்துணை பேருக்கும் மிகப் பெரும் இடையூறாக அமைவது அறிவியல் கலைச் சொல். அதற்கு வேர்ச் சொல் அறிந்து சொல்லாக்கம் செய்யும் அளவுக்கு இலக்கியப் புலமையும் இளங்கலை அறிவும் ஒருங்கே பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அப்பணியைச் செவ்வனே செய்ய இயலும். அத்தகையவர்கள் மிக அரிதாகவே உள்ளனர். அறிவியல் கலைச் சொற்களை உருவாக்கித் தந்தால், அறிவியல் நூல்களை எழுதுபவர்கள் அல்லது மொழி பெயர்ப்பவர்கள் ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்க் கலைச் சொற்களை உரிய இடத்தில் பயன்படுத்தித் தங்கள் பணியை செவ்வனே செய்து முடிக்க முடியும் என்பதைத் தெளிவாக உணர்ந்து தெளிந்தேன். எவ்வாறேனும் முயன்று செங்கற்களைச் சேகரித்து வைத்துவிட்டால் கட்டிடம் கட்டுவது மிக எளிதாக அமையும் என்பதால் அறிவியல் கலைச் சொல்லாக்கப் பணியை தலையாய பணியாக மேற்கொள்ளலானேன்.

அறிவியல் தமிழ்ப் பணியின் தொடக்கமாக கலைச் சொல்லாக்கத்துக்கேற்ற பணி வாய்ப்பு உங்களுக்கு வாய்த்தது எப்படி?



சென்னை வானொலி நிலையத்துணை இயக்குநர் திரு. ஹக்கீம் அவர்களை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் என் அறிவியல் தொடர்பான தமிழ்பணியாற்ற விழையும் ஆர்வத்தையும் நோக்கத்தையும் விவரித்தேன். அவர் என் விருப்பத்தைப் புரிந்து கொண்டவராக சாகித்திய அகாடமி தென்னகச் செயலாளர் டாக்டர். கே.எம். ஜார்ஜ் அவர்களைச் சந்திக்கப் பணித்தார்.

டாக்டர் ஜார்ஜ் அவர்களை நேரில் கண்டு பேசிய போது அவர் என் நோக்கத்தைப் புரிந்து கொண்டவராக, என் அறிவியல் தமிழ்ப் பணிக்கேற்ற இடம் தென்மொழிகள் புத்தக நிறுவனமாகத்தான் இருக்க முடியும். அங்குதான் புதிதாக அறிவியல் நூல்கள் பலவற்றை தமிழ் உட்பட தென்னக மொழியில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது, என்று கூறி அங்கு செல்லப்பணித்தார். அந்நிறுவனம் அப்போதுதான் ஆறு அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட திட்ட மிட்டிருந்தது. நான் அந்நிறுவனத்தை அணுகினேன், அதன் தலைவர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் எனக்குப் பகுதி நேரப் பதிப்பாசிரியர் பணியளித்தார். பின், என் பணியின் வீச்சை அறிந்து மூன்றே மாதங்களில் முழுநேரப் பதிப்பாசிரியராக நியமித்தார். அதன் பின், "புத்தக நண்பன்" மாத இதழ் பணியும், அதனைத் தொடர்ந்து "யுனெஸ்கோ கூரியர்" பன்னாட்டுத் திங்களிதழ் பணியும் கிடைத்தது. இதனால் என் சொல்லாக்கப் பணி எல்லா வகையிலும் விரைவு பெற்றது.

பன்னாட்டு இதழான "யுனெஸ்கோ கூரியர்" மாத ஏட்டின் தமிழாக்கப் பணி களில் தங்கள் அனுபவங்கள் என்ன?

யுனெஸ்கோ நிறுவனம் ஐ.நா.வின் பேரங்கமாகும். உலகளாவிய முறையில் கல்வி, அறிவியல், பண்பாட்டுச் செய்திகளை உலக மொழிகள் பலவற்றில் வெளிவரும் திங்களிதழாகும். அவ்விதழில் அதிக அளவில் இடம்பெறுவது அறிவியல் செய்திகளாகும். இதழ் முழுமையும் மொழி பெயர்ப்புக் கட்டுரைகளைக் கொண்டதாகும். அனைத்துக் கட்டுரைகளும் உலக வல்லுநர்களால் எழுதப்படுபவையாகும்.

என் மொழிபெயர்ப்புப் பணி சிறப்பாக அமையும் வகையில் பெரும் முயற்சி செய்து பன்னிரண்டு மொழி பெயர்ப்பு உத்திகளை வகுத்து, அதற்கேற்றாற்போல் கட்டுரைகளை மொழி பெயர்த்து வெளியிடலானேன். சென்னைப் பல்கலைக்கழகம் முதுநிலைப் பட்டதாரிகளுக்கான மொழி பெயர்ப்புப் பாடத் திட்டத்திற்கான பார்வை நூலாக, யுனெஸ்கோ கூரியர் தமிழ்ப் பதிப்பு பரிந்துரை செய்யப்பட்டது.

ஒவ்வொரு இதழுக்கும் குறைந்தது இருபது புதிய கலைச் சொற்களை உருவாக்கிப் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை. இத்தகைய கால நெருக்கடி என்னை மிகத் துரிதமாகச் செயல்பட வழி வகுத்தது. கடந்த 35 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான கலைச் சொற்கள் உருவாக, டிரஸ்ட் நிறுவனம் வெளியிட்ட நூல்களும், யுனெஸ்கோ கூரியர் திங்களிதழும் பெரும் தூண்டுதலாகவும் துணையாகவும் எனக்கு அமைந்தது எனலாம்.

யுனெஸ்கோ கூரியர் 30 உலக மொழி இதழ்களில் தமிழ்ப் பதிப்பு நான்காவது இடத்தைப் பெற்றது. இதற்கு அடிப்படைக் காரணம், அனைத்து மொழி இதழ்களும் மொழி பெயர்ப்பு இதழ்களேயாயினும் தமிழ்ப் பதிப்புக் கூரியர் நான்காம் இடத்தைப் பெற்றதற்கான காரணத்தை அதன் தலைமையாசிரியர் அனைத்துக் கூரியர் இதழ்களம் மொழி பெயர்ப்பு இதழ்களேயாகும். இருப்பினும், மற்ற இதழ்களைக் காட்டிலும் தமிழ் இதழ்களில் வெளியிடப்படும் மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் அனைத்தும் மொழி பெயர்ப்பு எனும் வாடையே இல்லாமல் மூலமாகத் தமிழில் எழுதப்பட்ட கட்டுரைகளாகவே வெளி வருகின்றன என்பது தமிழறிந்த உலக மொழியியலாளர்களின் ஒருமித்த கருத்தாகும்.

மேலும், கட்டுரைகளில் இடம் பெறும் கலைச் சொற்கள் மற்ற மொழி இதழ்களில் பெரும்பாலும் ஒலிபெயர்ப்பாக வெளியிடப்படும் போது தமிழ் கூரியர் இதழில் மட்டும் அனைத்துக் கலைச் சொற்களும் தமிழில் வடிவம் பெற்ற, தமிழுக்கென்றே உருவாக்கப்பட்ட தமிழ்க் கலைச் சொற்களாகவே வெளியிடப்படுகின்றன என்பது உலகத் தமிழியல் வல்லுநர்களின் ஒருமித்த கருத்தாக உள்ளது என்று புகழ்ந்து பேசியது இங்கு எண்ணத்தக்கதாகும்.

சட்டத்தமிழ் ஆக்கத்தில் தங்கள் முயற்சிகள் எவை?

சட்டத்துறையும் ஒருவகையில் அறிவியலின் பாற்பட்டதுதான். அத்துறையில் இளமை முதலே எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

நான் பதிப்பாசிரியராகப் பணியாற்றி வந்த தென்மொழிகள் புத்தக

நிறுவனத்துக்காக “லா:பார் லேமென்” என்ற புத்தகத்தைத் தமிழில் மொழி பெயர்க்க முனைந்தபோதுதான் சட்ட அறிவின் இன்றியமையாமையை என்னால் நன்கு உணர முடிந்தது. ஓரளவேனும் சட்ட அறிவு வாய்க்கப் பெற்றவர் களால் மட்டுமே சட்டத்தைச் சிறப்பாக மொழி பெயர்க்க இயலும். மொழி பெயர்ப்பின் போது அவ்வப்போது எனக்கேற்படும் ஐயப்பாடுகளை எங்கள் நிறுவனத் தலைவர் திரு கோவிந்தராஜுலு அவர்களிடம் கேட்பதுண்டு. அவர் முன்பு சட்டத்துறை இயக்குநராக இருந்தவரும் கூட.

ஒருமுறை சட்டச் சொல் ஒன்றுக்கு விளக்கம் கேட்டபோது முறையாக சட்டம் படித்தால்தான் சட்ட மொழிபெயர்ப்பு எளிதாக இருக்கும். நீங்கள் ஏன் சட்டம் பயிலக்கூடாது? இவ்வாண்டு முதல் மாலை நேரச் சட்டக் கல்லூரி தொடங்கப்படுகிறது. அதில் உடனடி யாகச் சேருவதற்கு முயற்சி மேற்கொள்ளுங்கள், என்று கூறி ஆர்வ மூட்டினார். அவரது யோசனைக் கிணங்க, மாலைநேர சட்டக் கல்லூரியில் சேர்ந்து மூன்று ஆண்டுகள் சட்டம் படித்தேன். அதன் விளைவு நான் ஜேபி என்று அழைக்கப்பட்ட ஜஸ்டிஸ் ஆ:ப் பீஸ் எனும் பட்டத்தோடு கூடிய கௌரவ மாகாண மாஜிஸ் திரேட் எனும் பணி கிடைத்து, சில காலம் பணி ஆற்ற முடிந்தது.

இந்த சூழல்களெல்லாம் சட்டச் சொற்களுக்குத் தமிழ் வடிவம் காண்பதை பொழுது போக்காகக் கொண்டிருந்தேன். பின்னர், இந்நிலையில் இந்திய அரசமைப்புச் சட்டம் திரு. மா.சண்முக சுப்பிரமணியம் பொறுப்பில் அமைந்த சட்டக் குழுவால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, தி.மு.க. அரசால் வெளியிடப்பட்டது. திடீரென இந்திரா காந்தியால் அவசர நிலை அறிவிக்கப்படவே. தி.மு.க ஆட்சியைக் குறைகூறுவதற்கு இந்திய அரசமைப்புச் சட்ட மொழி பெயர்ப்பும் மேலும் ஒரு காரணமாக்கப்பட்டது. இம்மொழிபெயர்ப்பு முறையாகச் செய்யப்படவில்லை. நிறைய தவறுகள் உள்ளன. எனவே, இந்நூலை விற்பனைக்கு விடாமல் முடக்க வேண்டும் என ஜஸ்டிஸ் மகராஜன் தந்த கருத்தை ஏற்று, மூட்டைகட்டி மூலையில் போடப்பட்டது.

அவசர நிலை காலத்தில் ஜஸ்டிஸ் மகராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, மீண்டும் எளிய நடையில் பெயர்ப்பதாகக் கூறி மொழி பெயர்த்து வெளியீட்டு விழா நடத்தி வெளியிட்டார்கள். மறுநாளே திரு.மா. சண்முகசுப்பிரமணியம் அதிலுள்ள தவறுகளை யெல்லாம் பட்டியலிட்டு ஆளுநர் வசம் தர, அவர் நூலை விற்பனைக்கு அனுப்பாமல் முடக்கி, முந்தைய கட்டுகளோடு மூலையில் போட்டார்.

இந்த இரு நிகழ்வுகளுமே எனக்குமிகுந்த மனவருத்தத்தை அளித்தன. அப்போது எனக்குள் எழுந்த கேள்வி சட்டைத்தைக் கொள்ளுகிற தகுதி தமிழுக்கு இல்லையா? அல்லது தமிழனுக்கு இல்லையா? என்னுள் குடைந்து கொண்டிருந்த இக்கேள்விக்குத் தக்க விடை 1988ஆம் ஆண்டு மலேசிய மண்ணில் கிடைத்தது.

எனது மூன்றாவது உலகப் பயணத்தின் இறுதிக்கட்டமாக மலேசியா வந்தபோது தமிழர் அமைப்புகள் வரவேற்பளித்தன. அதில் டத்தோ. ச.சாமிவேலு உடபட மூன்று தமிழ் அமைச்சர்கள் மற்றும் தமிழர் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மலேசிய கூட்டரசு அரசமைப்புச் சட்டத்தில் மொழி சிறுபான்மையினருக்கென சில உரிமைகளும் சலுகைகளும் தரப்பட்டுள்ளன. அவை சட்டம் பயின்றவர்களைத் தவிர தமிழ் மொழி பேசும் சிறுபான்மைத் தமிழர்க்குத் தெரியவில்லை. அவற்றைத் தமிழர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் மலேசிய கூட்டரசு அரசமைப்புச் சட்டத்தை ஏன் தமிழில் தரக்கூடாது? இதை மலேசிய இந்தியக் காங்கிரஸ் சாதிக்கலாமே! எனக்கூறியபோது அமைச்சர் டத்தோ ச.சாமிவேலு அவர்கள் சட்டம் பயின்ற நீங்களே ஏன் அதைச் செய்து தரக் கூடாது? யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர் என்ற முறையில் எங்களுக்கும் நீங்கள் உரிமை உள்ளவர்தானே? எனவே, இப் பொறுப்பை நீங்களே மனமுவந்து ஏற்று, செவ்வனே நிறைவேற்றித் தர வேண்டும், என வேண்டுகோள் விடுத்தார். அதை நான் முழு மனதோடு ஏற்றுக் கொண்டேன்.

மறுநாள் காலையில் இண்டர்நேஷனல் வாடிக்கர் சர். வீசஸ் உரிமையாளர் திரு செய்யது இப்றாஹிம் என்னைச் சந்தித்து, மலேசியக் கூட்டரசு அரசமைப்புச் சட்டத்தைத் தமிழில் தந்தால், தங்கள் நிறுவனம் வெளியிடும் என வாக்குறுதி தந்து ஊக்கமளித்தார். நான்கு மாதங்களில், உற்ற நண்பரும் என்னைப் போல் சட்டம் பயின்றவருமான திரு.இரா. நடராசன் அவர்களின் உறுதுணையோடு, மலேசிய கூட்டரசு அரசமைப்புச் சட்டத்தை தமிழில் மொழி பெயர்த்து, அச்சுப் படிவம் தயாரித்து அனுப்பினேன். அங்குள்ள சட்ட வல்லுநர் ஆய்ந்து, தவறேதும் இல்லை எனச் சான்றளித்த பின்னர் அச்சட்டம் மலேசியாவில் வெளியிடப்பட்டது. அவ்விழாவுக்கு நானும் அழைக்கப் பட்டேன். இவ்வாறு ஒரு நாட்டு அரசமைப்புச் சட்டம் முழுமையாக முதன் முதல் அனைவரும் ஏற்கும் வகையில் வெளியிடப்பட்ட தென்றால், அது மலேசியாக் கூட்டரசு அரசமைப்புச் சட்டம் மட்டுமே என்பது வரலாற்றுப் பதிவாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டத் தமிழாக்கத்திற்கு ஏன் இந்த நிலை?

எந்தவொரு மொழிபெயர்ப்பும் நூற்றுக்குநூறு துல்லியமாக இருக்கும் எனக் கூறுவது கடினம். ஆங்காங்கே பெயர்ப்பு முறையில் சிறு சிறு பிசிறுகள் இருக்கவே செய்யும். அந்த முறையில்தான் இந்திய அரசமைப்புச் சட்டத் தமிழக்காமும் அமைந்தது.

ஆனால், மொழி பெயர்ப்புப் பொறுப்பேற்ற இரு அறிஞர்கட்கிடையே ஏற்பட்டிருந்த தங்கள் தனிப்பட்ட விரோதத்தையும் குரோதத்தையும் இப்பணியின் மூலம் வெளிப்படுத்த விழைந்ததன் விளைவே, இந்திய அரசமைப்புச் சட்டத் தமிழாக்கத்திற்கு ஏற்பட்ட தடுமாற்றமும் தாமதமும்.

அறிவியல் போன்றே சட்டத்திற்கென தனித்துவ மொழியும் நடையும் உண்டு. அதைக் கருத்தில் கொண்டு திரு.மா.சண்முக சுப்பிரமணியன் குழு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை முதலில் தமிழாக்கம் செய்தது. அவசரநிலை காலகட்டத்தில் தி.மு.க. அரசின் மீது குற்றம் சுமத்தியாக வேண்டும் என்ற கட்டாய அரசியல் சூழலில் அரசமைப்பு சட்ட மொழி பெயர்ப்பு முறையைக் கடுமையாகச் சாடினர். இதற்குப் பெருந்துணையாயமைந்தவர் ஜஸ்டிஸ் மகராஜன். மீண்டும் ஜஸ்டிஸ் மகாராஜன் தலைமையில் அமைக்கப் பட்ட குழு மொழிபெயர்த்து வெளியீடும் செய்தது. உடனே திரு.மா. சண்முக சுப்பிரமணியம் அதிலுள்ள தவறுகளையும் குறைகளையும் பட்டியலிட்டு விளக்கி, ஆளுநரிடம் புகார் மனு அளித்தார்.

அதையும் பரிசீலித்து ஆளுநர் அரசமைப்புச் சட்ட மொழிபெயர்ப்பு நூலை விநியோகிக்கத் தடை விதித்தார். இவ்வாறு, இருமுறை இருவேறு சட்ட அறிஞர்கள் தலைமையில் அமைந்த குழுக்கள் பெயர்த்த சட்டம் மக்கள் கைக்குப் போய்ச் சேர முடியா நிலை இருந்தது. தமிழ் நாடு அரசின் சட்ட அமைச்சராக திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி இருந்தபோது, என்னைச் சந்திக்கும் போதெல்லாம் நீங்கள்தான் அரச மைப்புச் சட்ட நூலை சீர்மை செய்ய உதவ வேண்டும் என்று கூறினாரே தவிர மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுத்தாரில்லை. தவறைச் சுட்டிக்காட்டி வாதிட்ட இரு சட்ட வல்லுநர்கள் இன்று இல்லாத நிலையில், தமிழ் பெயர்ப்பு அரசமைப்புச் சட்ட நூல் விற்பனைக்கு வந்துள்ளதாகக் கேள்வி.

தமிழில் கலைச் சொல்லாக்க நெறியில் பாவாணர் மற்றும் அருளி

இருவர் நெறிக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன? தங்கள் நெறிக்கான காரணங்கள் / ஆதாரங்கள் என்ன?

இதை விவரிக்க ஒரு சிறு நூலே எழுத வேண்டும். சுருங்கச் சொன்னால் மொழியும் நடையும் காலத்தின் போக்குக்கும் தேவைக்கேற்ப அமைய வேண்டும், எனும் கொள்கை உள்ளவன் நான். பழையனவிட்டு புதியன் புனையும் போக்கு வளர்ந்து வளம் பெற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். சுருங்கக் கூறுமிடத்து நாம் சங்க காலத்தை நோக்கி நகர்வதைவிட சங்க காலத்திலும் பன்மடங்கு மேம்பட்ட எதிர்காலத்தை நோக்கி விளைவு நடைபோடுவதே சாலச் சிறந்தது. அதுவே வளர்ச்சிக்கு வழி.

பழந்தமிழ்ப் பற்றாளர்களில் சிலர் சங்க காலச் சொல் அடிப்படையில் அல்லது சாய்வில் புதிய சொல்லுருவாக்கம் அமைதல் வேண்டும் என்பது அவர்தம் நிலைப்பாடு எனக் கருதுகிறேன். இக்கால மக்களின் புரிந்துணர்வுக் கேற்பக் கருத்துணர்த்தும் வகையில், பொருள் தெளிவுறுத்தும் நிலையில தமிழ் சொல்லுருவாக்கம் அமைய வேண்டும் என்பது என் போன்றவர்கள் நிலை. அவர்கள் நிலைப்பாடு இலக்கியத்துக்கு வேண்டுமானால் ஓரளவு இயைபுடைய தாக இருக்கலாம். ஆனால் அறிவிய லுக்குச் சரியாக அமையவியலாது. இதில் பொருளுணர் திறனுக்கே முதன்மை நிலை. மொழிச் சிறப்புக்கு இரண்டாம் நிலையே. அவர்கள் முயற்சி பழந்தமிழ் இலக்கியச் சொல்களை அடியொற்றி சொல்லுரு வாக்கம் அமைதல் வேண்டும் என்பது. அவர்கள் நிலைப்பாடு இதுவே. இன்றைய வழக்காற்றை ஒட்டி புதிய சொற்கள் உருவாக்கம் பெற வேண்டும் என்பது என் போன்றோர் நிலை எனச் சுருங்கச் சொல்லலாம். அதற்கேற்படித் திறங்களையும் உருவாக்கம் செய்ய வேண்டும் என்பது காலக் கட்டாயம். அவ்வகையில் தொல்காப்பிய இலக்கணத்துக்குப்பின் ஒரு நன்னூல் இருக்கனும், நன்னூலுக்குப் பின் கால, மொழி மாற்றங்களுக்கேற்ப புத்திலக் கணம் வேண்டாமா? சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதுவரை எட்டு கலைச் சொல் அகராதிகளைத் தாங்கள் சிறப்பாகத் தொகுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அறிவியல், கலையியில் துறைகளில் இனியும் கலைச் சொல்லாக்கத்திற்கான வாய்ப்புகள் / தேவைகள் உள்ளனவா?

இதுவரை எட்டு அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம் சார்ந்த கலைச் சொல் களஞ்சிய அகராதிகளைத் தொகுத்தளித் துள்ளேன். ஏழாவது அகராதி 1,600 பக்கங்களில் கணினிக்கும் எட்டாவது அகராதி 1,200

பக்கங்களில் மருத்துவத்துக்கும் வெளியிட்டுள்ளேன். ஒன்பதாவது அகராதி 127 தொழில் நுட்பப் பிரிவிகளுக்குரியது. சுமார் 2,000 பக்கங்களில் அமையும். இது இவ்வாண்டு செப்டம்பரில் வெளிவரும்.

முன் எப்போதையும்விட இப்போதுதான் கலைச்சொல்லாக்கத் திற்கான அவசிய, அவசரத் தேவை மிக அதிகமாகியுள்ளது. காரணம் நாளும் விரைந்து விரிவு பெற்று வளமாக வளர்ந்துவரும் அறிவியல் துறைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சொல் லாக்கம் செய்வது கட்டாயத் தேவையாகும். சொல்லப்போனால் முன் எப்போதையும்விட இப்போதுதான் சொல்லாக்கப்பணி சூடு பிடித்துள்ள தெனலாம். தமிழ் இயல்பிலேயே அறிவியல் மொழியாக, அறிவியலைச் சொல்லுவதற்கென்றே உருவாக்கப்பட்ட மொழியாக நெகிழ்திறனோடு அமைந்திருப்பதால் புதுச் சொல்லாக்கம் உலகுள்ளவரை தமிழில் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். வளர்ச்சிக்கு எல்லை ஏது?

தமிழைச் செம்மொழி என்று மைய அரசு அறிவித்ததில் தங்களுக்குப் போதுமான மன நிறைவு இருக்கிறதா? இல்லையென்றால் தங்கள் மனநிறைவுக்கு ஏற்ற முறையில் செம்மொழியாக்கம் எப்பொழுது முழுமை பெறும்?

மைய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்ததில் எனக்கு மகிழ்ச்சியே. உலகிலேயே ஒரு மொழியைச் செம்மொழி என்ற சட்டபூர்வமாக அரசு அங்கீகாரம் பெற்ற மொழி தமிழ் மட்டுமே என்பதில் நமக்கெல்லாம் பெருமைதான்.

ஆனால் இந்த அறிவிப்பில் இடம் பெற்ற சில அம்சங்கள் செம்மொழித் தமிழுக்குப் பெரும் பாதகமாக அமைந்து. முழு வெற்றியாக அமையாமல் மூளியான வெற்றியாக்கி விட்டது.

செம்மொழிக்குரிய முதன்மைத் தகுதி அதன் தொன்மையாகும். செம்மொழி அறிவிப்பில் முதலில் ஆயிரம் ஆண்டு என்று அறிவித்தது. பின் எதிர்ப்பு கண்டு, ஆயிரத்து ஐந்நூறு என மாற்றப்பட்டது. அதாவது கம்பர் காலத்தமிழ். பக்தி இயக்க காலத் தமிழுக்கு உயர்த்தப்பட்டது. அதற்கு முன்பு இருந்த காப்பிய காலம், சங்க காலம், திருவள்ளுவர் காலம், தொல்காப்பியர் காலம், எல்லாமே மறக்கப்பட வேண்டிய வரலாற்றுக் காலங்கள் என்றாகிறது. இதைவிட வேறு வரலாற்றுக் கொடுமை உண்டா? எப்படி ஏற்க முடியும்.

மொழி என்ற அளவில் செம்மொழி தமிழ் கல்வியுடன் தொடர்புடையது எனக் கூற வேண்டியதில்லை. மரபு முறையில் அரசால் ஏற்கப்பட்ட சமஸ்கிருதம் முதலான செம்மொழிகள் இருக்கும் கல்வித் துறையில் தமிழ் இடம் பெறுவது தானே முறை. அப்போதுதானே சம்ஸ்கிருதம் முதலான செம்மொழிகள் பெற்றுவரும் நிதியுதவிகள் செம் மொழித் தமிழுக்கும் கிடைக்க வாய்ப்பேற்படும். மாறாக, நிதி வசதியோ, துறை விரிவோ இல்லாத பண்பாட்டுத் துறையில் செம் மொழித் தமிழ் இணைக்கப் பட்டிருப்பது ஏன்?

இப்படியொரு கேள்வியை நான் எழுப்பியபோது மைய அமைச்சர் ஆ. இராசா அவர்கள் செம்மொழிப் பட்டியல் பண்பாட்டுத் துறையில் வைக்கப்பட்டுள்ளதால் தமிழ் அங்கே அப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இனி, மைய அரசால் ஏற்கப்படும் செம்மொழிகள் அப்படியலில் தமிழுக்குக் கீழே இடம் பெறும். பட்டியல் முழுமை பெற்றவுடன் கல்வித் துறைக்கு மாற்றப்படும் எனப் பதிலளித்தார்.

சரி, சென்ற சில மாதங்களுக்கு முன்பு சம்ஸ்கிருதம் செம்மொழியாக மைய அரசால் சட்டபூர்வமாக ஏற்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. செம்மொழி சம்ஸ்கிருதம் செம்மொழிப் பட்டியலில் செம்மொழித் தமிழுக்குக் கீழே கொண்டு போய் சேர்க்கப்பட்டதா? இல்லையே. எப்போதும் போல் கல்வித் துறையில் தானே இன்றுவரை இருந்து வருகிறது.

செம்மொழித் தமிழ் கல்வித்துறையில் இடம் பெற்றால் பல்கலைக்கழக மானியக் குழுவால் செம்மொழியாக ஏற்கப்படும். இதனால், பாடமொழியிலுள்ள இந்தியப் பல்கலைக்கழகங்கள் தோறும் சம்ஸ்கிருதத்துக்கு இருப்பது போல் ஆய்வுத் துறைகள் தொடங்கப்படும். மானியக் குழு ஏற்பதால் உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் ஏற்க, ஆங்காங்கே தமிழ்த்துறைகள் உருவாக வாய்ப்பேற்படுமே! பண்பாட்டுத் துறையில் செம்மொழித் தமிழ் சிறை வைக்கப்பட்டிருப்பதால் ஏதும் நடைபெற வாய்ப்பில்லாமல் போகிறதே?

பண்பாட்டுத் துறையில் இடமளிக்கப்பட்ட செம்மொழித் தமிழ் வளர்ச்சிக்கு கல்வித் துறை தமிழ் வளர்ச்சி வாரியம் அமைத்து, 3 கோடியே 31/2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. இது பக்கத்து வீட்டுக்காரர் விருந்தளிப்பது போன்றது. எவ்வளவு காலத்துக்கு நிதி உதவி வழங்கப்படும் என்பதற்கு உத்திரவாதம் ஏதும் இல்லை. விருந்தும் மருந்தும் மூன்று நாட்கள் என்பது தமிழ்ப் பழமொழி. செம்மொழித் தமிழ் கல்வித் துறையில் இடம் பெற்றால் சம்ஸ்கிருதம் ஆண்டு தோறும்

அனுபவித்துவரும் நூறு கோடிக்கு மேற்பட்ட நிதியுதவியை செம்மொழித் தமிழும் பெற்று வளரலாமே!

40 நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதுணையோடு, தமிழ்நாடு முதலமைச்சர் என்ற தகுதிப் பாட்டோடு தமிழக முதல்வர் கலைஞர் இதை விரைந்து சாதிக்க முடியும். இரண்டாயிரம் ஆண்டுத் தொன்மை, கல்வித்துறையில் இடம்பெறல் இரண்டும் வெகு விரைவில் டாக்டர் கலைஞரால் நிறைவேற்றப்படும் என நம்புவோமாக.

தமிழ் செம்மொழியாக்கக் குழுவில் தாங்களும் இடம் பெற்றிருக்கிறீர்கள். இக்குழுவில் தங்கள் பணி என்ன? தமிழைச் செம்மொழியாக மேம்படுத்துவதற்கு நீங்கள் எவற்றை முன்வைக்கிறீர்கள்?

தமிழ் செம்மொழியாக்கக் குழுவில் இடம் பெறச் செய்யப் பட்டுள்ளேன். தமிழ் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைத் தந்துள்ளேன். தமிழக அளவிலும், இந்திய அளவிலும், உலக அளவில் காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ற திட்டங்கள். இவைகளை நிறைவேற்ற 150 கோடிக்குமேல் தேவைப்படும் என அதிகாரிகளால் கருத்துரைக்கப் பட்டது. 3.32 கோடியை வைத்துக் கொண்டு எதைச் செய்ய முடியுமோ அதைத்தானே செய்ய முடியும். நிர்வாக செலவுக்கே பெருந்தொகை தேவை. இதற்காகத்தான் நிதிவசதி நிறைந்த கல்வித் துறையில் செம்மொழித் தமிழ் இடம் பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

மக்கள் மத்தியில் தமிழுணர்வு தொடர்ந்து தாழ்ந்து வருகிறது. காரணங்களென நீங்கள் எவற்றை வரிசைப்படுத்துவீர்கள்? மக்கள் தமிழுணர்வை மீண்டும் பெறுவதற்கு அரசு, தமிழ்க் கல்வித்துறை சார்ந்தவர்கள், இயக்கங்கள்? இதழ்கள், தகவல் ஊடகங்கள் செய்ய வேண்டிய பணிகள் எனத் தாங்கள் எவற்றை முன் வைப்பீர்கள்?

மிக நீண்ட கேள்வி. முதலில் ஒரு உண்மையை நாம் அழுத்தமாக மனதில் பதியவைக்க வேண்டும்.

நாம் தமிழ் பேசுவதால் தமிழர்கள். நாம் தமிழர்களாக இருப்பதால் தமிழ் இனத்தையும் சேர்ந்தவர்கள்.தமிழினம் வாழ்வதால் இம்மண் தமிழ்நாடு என அழைக்கப் படுகிறது. சுருங்கச் சொன்னால் தமிழனின் முகமும் முகவரியும் தமிழாகும். தமிழ் போய்விட்டால் அவன் முகமும், முகவரியும் இல்லாமற் போய்விடும். விளைவு, உலகில் தமிழ் இனம் அநாதைச் சமுதாயம் என்ற இழிநிலையைப் பெறும். இதைத் தவிர்க்க, ஒரே வழி தமிழை அழியாமல் பேணி வளர்ப்பதுதான்.

தமிழின் இன்றைய தாழ் நிலைக்கு எத்தனையோ காரணங்கள் உண்டெனினும் முக்கியமானது அரசியல் வாதிகளின் பொறுப்பற்ற,

சுயநலப்போக்கு, கல்வித் துறையில் தமிழ்ப் புறக்கணிப்பு, செய்தி ஊடகங்களின் தமிழ் விரோதப் போக்கு, ஆங்கிலக் கல்வி வணிகர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஆங்கில மாயை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழ்நாட்டில் தமிழுணர் வைத் தட்டியெழுப்பி பொங்கச்செய்த பெருமை திராவிட இயக்கங்களைச் சாரும். அறுபதுகளில் தமிழார்வம் உச்ச நிலை பெற்ற போது இந்தி எதிர்ப்பு வெடித்தது. இந்தியைத் தடுக்கும் தடுப்புச் சுவராக ஆங்கிலத்தைக் கருதினர். அவ்வுணர்வை வலுவாக்க அளவுக் கதிகமான பற்றும் பாசமும் ஆங்கில மொழிமீது பொழியத் தொடங்கினர். தமிழ்ப் பெருமை பேசிய நாக்குகள், ஆங்கிலத் துதி பாடிகளாக மாறின. இந்தியிடமிருந்து தமிழைக் காக்க ஆங்கிலத் துணை தேடியவர்கள் ஆங்கிலத்தை வலுவாக அனைத்து மட்டங்களிலும் நிலைநிறுத்த முழுமுயற்சி மேற்கொண்டனர். ஆங்கிலம் படிப்பதையும் பேசுவதையும் பெருமையாக, அறிவார்ந்த செயலாகக் கருதி காட்ட ஆங்கில ஆதிக்கம் வலுப்பெற்றது. இவ்வுணர்வின் வலுவான வளர்ப்புப் பண்ணைகளாக ஆங்கில வழிப் பள்ளிகள் அமைந்தன. தமிழ் நாடெங்கும் புற்றீசல் போல நர்சரி பள்ளிகளும் மெட்ரிகுலேசன் பள்ளிகளும் உருவாகி நிலை பெற்றன. 1947இல் மூன்று மெட்ரிக்குலேசன் பள்ளிகள். அவை ஆங்கிலோ இந்தியக் குழந்தைகளுக்கானவை. 1967 இல் இவற்றின் தொகை அனைவருக்கும் இரண்டாயிரமாவது ஆண்டில் இவற்றின் தொகை 2000. இன்று 3000ஐ தொடும் நிலை. இந்த வளர்ச்சிக்கு யார் காரணம் என்பது புரியும். படிப்படியாகத் தமிழ் வழிக் கல்வி என்பது கருகி, பின் இல்லாமலே போய்விட்ட நிலை.

ஆங்கில வழிக் கல்வி பெறுவோர் தொகை பெருகி வருவதால், ஆங்கிலம் கலந்த தமிழை ஊடகங்கள் அனைத்தும் கையாள முற்பட்டுள்ளன. ஆங்கிலத்தின் துணையின்றி தமிழால் இயங்க முடியாது எண்ணுமளவுக்கு ஆங்கில - தமிழ் கலப்பு மொழிக் கையாளல் போக்கு எங்கும் தலைவிரித்தாடுகிறது.

ஆங்கிலம் கற்றால் மட்டுமே வேலை வாய்ப்பு என்ற தவறான எண்ணம் வலுவாக ஆங்கிலக் கல்வி வணிகர்களால் ஊட்டி வளர்க்கப்பட்டு வருகிறது.

ஆங்கில மொழியைத் தாய்மொழியாக உடையவர்களின் ஒட்டுமொத்தத்தொகை உலகில் 48 கோடியே 67 இலட்சமாகும். இவர்கள் இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஆங்கிலம் தானே கற்கிறார்கள். இங்கெல்லாம் வேலை இல்லா திண்டாட்டம் இல்லையா? இந்நாடுகளில் வேலை

வாய்ப்பில்லாமல் அரசு உதவித்தொகை பெறுவோர் 7 முதல் 9 விழுக்காட்டினர் இருக்கின்றனர் என்பது எதைக் காட்டுகிறது?

உலக மயமாதல் கொள்கை உருவாகியுள்ளதால், அதற்கேற்ற மொழியாக ஆங்கிலம் அமையும் என்றால், அதை ஒரு பாடமாகக் கற்றால் போதுமே. தமிழ்நாட்டிலிருந்து வேலை தேடி பிற மாநிலங்களுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ செல்வோர் 10 விழுக்காட்டினருக்குமேல் இல்லை. எஞ்சியுள்ள 90 விழுக்காட்டினர் தமிழ்நாட்டில் தானே வாழ்ந்தாக வேண்டும். அவர்கள் தமிழை விடுத்து ஆங்கிலம் கற்க வேண்டும் எனக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது. எண்ணிப்பார்க்க வேண்டாமா?

ஆங்கில மொழியைக் காட்டிலும் தமிழில் தான் சட்டங்களைத் திறம்பட விவாதிக்க முடியுமென்று தாங்கள் ஒருமுறை குறிப்பிட்டீர்கள். இதைச் சற்று விளக்கிச் சொல்லுங்கள்.

ஒரு காலகட்டத்தில் ஐரோப்பாவில் சிறந்த சட்டமொழியாக லத்தீன் கருதப்பட்டது. நவீன காலத் தொடக்கத்தில் ஃபிரெஞ்சு மொழி சிறந்த சட்ட மொழியாகப் போற்றப்பட்டது. இங்கிலாந்து நாடு வழக்குமன்ற மொழியாகவே ஃபிரெஞ்சு மொழியை ஏற்று நடைமுறைப்படுத்தி வந்தது. பிறகு, காலணி ஆதிக்கத்தின் விளைவாக ஆங்கிலமே சட்ட மொழியாக ஏற்கப்பட்டது. எனினும் லத்தீன் ஃபிரெஞ்சு சொற்கள் சட்ட நூல்களில் அதிக அளவில் இடம் பெற்றிருப்பதை முற்றிலுமாகத் தவிர்க்க முடியவில்லை. காரணம், சில சட்ட நுணுக்கங்களைத் துல்லியமாக விளக்க ஆங்கிலத்தால் இயலாததேயாகும். ஆங்கிலம் ஓர் நிறைவான மொழி அன்று - என்பது தான் முழு உண்மை.

சட்டம் படித்த என்னால் திடமாகச் சொல்லமுடியும். சான்றாக Damages என்ற சட்டச் சொல் Civil Law மற்றும் Criminal law இரண்டிலும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு சட்ட நூல்களிலும் வெவ்வேறு பொருளைக் கொண்டது இச்சொல். சான்றாக,

இரு நண்பர்கள் கூட்டு வணிகம் செய்கின்றனர். தவிர்க்கவியலா நிலையில் ஒருவர் மற்றவரை கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக வணிகம் செய்கிறார். அதில் பெரும் இழப்பு ஏற்படுகிறது. தன்னைக் கலந்தாலோசிக்காமல செய்த வணிக இழப்பை மற்றொருவர் ஏற்காமல் இழப்புக்கு ஈடுகேட்டு வழக்கு மன்றம் செல்கிறார். இது 'Damages' கேட்பதாக அமைகிறது.

இன்னொரு நிகழ்வில், பலர் முன்னிலையில் ஒருவர் மற்றவரை கடிந்து ஏசிப் பேசிவிடுகிறார். ஏசப்பட்டவர் பலர் முன்னிலையில் தன்மானம் போய்விட்டதாக வழக்கு மன்றத்தில் மானநட்ட வழக்குத் தொடுக்கிறார். இதுவும் 'Damages' என்ற ஆங்கிலச் சொல்லாலேயே குறிக்கப்படுகிறது. இங்கே இரண்டு வழக்கும் ஒன்று, இரண்டு வெவ்வேறு தன்மை கொண்டவை. ஆனால் அவற்றைக் குறிக்க ஆங்கிலச் சட்டத்தில் 'Damages' என்ற ஒரு சொல் மட்டுமே உண்டு.

இதையே தமிழில் குறிப்பிட்ட, பொருள் இழப்புக்கு ஈடுகேட்பதால் இங்கே இழப்பீடு என்றும் திட்டியதன் மூலம் தன்மானத்துக்கு தீங்கிழைத்ததால் அதற்கான நட்ட ஈட்டை, தீங்கீடு என்றும் பிரித்துக் கூற முடியும். இதைப் போல நூற்றுக்கணக்கான ஆங்கிலச் சட்டச் சொற்களுக்கு பொருள் நுட்பமுடனும் பொருட் செறிவுடனும் தனிச் சொல் தமிழில் சொல்ல இயலும்.

பல்வேறு காலகட்டங்களில் பலவிதமான படையெடுப்புகளிலிருந்து பல நூற்றாண்டுகள் தமிழ் தன்னைக் காத்து வந்துள்ளது. இனிவரும் காலங்களில் தமிழின் நிலை என்னவாக இருக்கும். மெல்லத் தமிழ் இனி?...

காலமாறுதலுக்கேற்ப உருவாகும் போக்குகளும் தேவைகளும் மாறுபடுவது தவிர்க்க முடியாத ஒன்று. இன்று வரை காலப்போக்குக்கும் தேவைக்குமேற்ப தமிழ் தன்னை தகவமைத்துக் கொண்டு வளமாக வளர்ந்துள்ளது என்பது இதன் வளர்ச்சிக்கு வரலாற்றின் பெருஞ்சிறப்பு.

சங்கம் தொடங்கி, சமயங்களின் படையெடுப்பு, மொழிகளின் படையெடுப்பு, இவற்றிற்கெல்லாம் ஆதார சுருதியாக அரசியல் போக்குடைய ஆட்சியாளர்களின் பலதரப்பட்ட படையெடுப்புகள். இத்தனை இடையூறுகளையும் தன் வளர்ச்சிக்கு உரமாகத் தமிழ் பயன்படுத்திக் கொண்டது என்பதுதான் தமிழின் சுவையான வரலாறு.

சங்கத்துக்கு முந்தைய காலகட்டம் சமயச் சாயலோ பிறமொழி ஊடுருவலோ இல்லாத காலம். தமிழன் இயற்கையோடு இயைந்தும் இயற்கையை கட்டியாளவும், முயன்று வெற்றி பெற்று, வந்த காலம் எல்லாம் என்னால் முடியும் என இருமாந்து கப்பல் மூலம் வணிகர்களாக உலகை வலம் வந்த காலம். சுருங்கச் சொன்னால் அறிவியல் பூர்வமாக வாழ்ந்துவந்த காலம்.

பல்வேறு இன, மொழி ஊடுருவலால் சங்க கால வாழ்க்கை முறை

சமுதாய வாழ்க்கை முறையாக அமைந்தது. அன்றும் வட சமயத்தாக்கம் ஏதும் அவன் வாழ்வை மாற்றி அமைக்க முடியவில்லை.அதனால்தான் சங்க இலக்கியங்களில் சமயக் கோட்பாடோ கடவுள் புகழ்ச்சிகளோ இல்லாத நிலை. ஒரு சில சொற்கள் கடவுள் பெயரோடு ஒத்துப் போவதால் அதற்கேற்ப வலியபொருள் விளக்கம் தந்து சங்கத் தமிழனுக்குச் சமயச் சாயம்பூச முற்படுகிறோம். அச்செயலும் கூட எண்ணெயும் தண்ணீரும் போலவே பட்டும் படாமலும் இருந்து வருகிறது.

சங்க கால இறுதிப் பகுதியில் வைதீக சமயம் ஆரியர்கள் மூலம் தமிழகத்தில் அழுந்தக் காலூன்றி வளரவாயின. அதையொட்டி தமிழ், சைவத் தமிழாகவும் வைணவத் தமிழகவும் முகிழ்க்கத் தொடங்கியது. சைவம் தென்னகச் சமயமாகக் கருதப்பட்டது. பின்னர் வட புலத்திலிருந்து வைதீக சமயத்தை எதிர்த்து சமண சமயம் தமிழகம் வந்தது. தமிழ், தன்னை சமணத் தமிழாக மாற்றிக் கொள்ளத் தவற வில்லை. சமணத்தை எதிர்த்து பெளத்தம் தமிழகம் வந்தது. தமிழும் பெளத்தத் தமிழாகத் தன்னை ஆக்கிக் கொண்டது.

சங்க காலத்திற்குப் பின் சமயச் சாயலுள்ள காப்பிய காலம் உருவாகியது. சிலப்பதிகாரம் கண்ணகி கோவலனின் கதையை மட்டும் விளக்கவில்லை. சமய சமரசத்தை உரத்த குரலில் கூறிய சமய நல்லிணக்க இலக்கியப் படைப்பு ஆகும்.

அதன்பின் வெளிநாட்டிலிருந்து கிருத்துவம் வர, தமிழ் கிருத்துவத் தமிழாகியது. இஸ்லாம் வந்த பிறகு இஸ்லாமியத் தமிழாக ஆகியது. ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் புதினம், சிறுகதை, புதுக்கவிதை, திறனாய்வு, ஓரங்க நாடகம் என புது இலக்கிய வடிவம் பெறலாயின. இன்று அறிவியல் வளர்ச்சி தந்த பெரும் தாக்கத்தால் தமிழ் தன்னை அறிவியல் தமிழாக உருமாற்றி ஆற்றல் மிக்க அறிவியல் மொழியாக மறு வடிவோடு மலர்ந்து மணம் வீசி வருகிறது.

இவ்வாறு காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப தன்னை உருமாற்றிக் கொள்ளும் தகைமைமிகு தமிழை, யாரும் எந்தக் காலகட்டத்திலும் கழிக்க முடியாது. தன் தலைமேல் விழ வரும் சுத்தியல் மீது ஏறியமரும் ஆற்றலானது உலக மொழிகளில் தமிழுக்கு வாய்த்த தனித்தன்மையாகும்.

மெல்லத் தமிழ் இனி?... எனக் கேட்டுள்ளீர்கள் மெல்லத் தமிழ் இனி சாகும். என்றந்தப் பேதையுரைத்தான் என்பது பாரதி பாடல் வரி. அந்தப் பேதை யார்?

பாரதி காலத்தில் பச்சையப்பன் கல்லூரி முதல்வராக ஒரு ஆங்கிலேயர் இருந்தார். தமிழ் நாட்டுக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றுவதால் இங்குள்ளவர்களோடு சரளமாகத் தமிழ்ப் பேசிப் பழக வேண்டும் எனப் பேராவல் கொண்டார். எனவே, தமிழாசிரியர்களிடமும் சந்திக்க வரும் நபர்களிடமும் தனக்குத் தெரிந்த தமிழில் பேச முற்படுவார். இவர் ஆங்கிலேயர் என்பதால் தமிழர்கள் தமிழில் பேசாது ஆங்கிலத்தில் பதிலளித்துப் பேசினர். இவர்கள் பேச்சுத் தமிழை தான் கற்க முடியாமற் போவதைவிட, தமிழில் பேச வேண்டிய தமிழர்களே, தமிழை விடுத்து ஆங்கிலத்திலேயே பேச விரும்புகின்றனரே. இந்த நிலை நீடித்தால் தமிழ் பேச ஆளில்லாமல் போய்விடாதா? அப்படியொரு நிலை ஏற்பட்டால் தமிழ் அழிந்து போகுமே என்ற கருத்தை ஒரு கூட்டத்தில் வெளிப்படுத்திப் பேசினார். அச்செய்தி பத்திரிகையிலும் வந்தது. ஆங்கிலேயர் வெளிப்படுத்திய ஆதங்கத்தைத்தான் பாரதி பாடலாகப் பாடினான்.

அவ்வெள்ளைக்காரர் கொண்டிருந்த அச்சம் இன்று பன்மடங்காகப் பெருகியுள்ள தென்னவோ உண்மை. இந்நிலை வெகு விரைவில் மாறும். தமிழ் அறிவியல் தமிழாக மலர்ந்து மணம் வீசி வளரும்.

புதிதாகப் பதவி ஏற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழுக்கு என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்? தமிழ் வளர்ச்சிக்கு ஏதாவது செய்யும் என்ற நம்பிக்கை தங்களுக்கு உண்டா?

தி.மு.கவின் தேர்தல் அறிக்கையை மட்டும் படித்து விட்டு இக்கேள்வியைக் கேட்கிறீர்கள் எனக் கருதுகிறேன். காங்கிரஸ் உட்பட மற்றகட்சிகளெல்லாம் தமிழ் வளர்ச்சி பற்றி, கட்டாயப் பயிற்சி மொழி பற்றி விரிவாக தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் போது முதன்மைக் கட்சிகளான தி.மு.கவோ அன்றி அ.தி.மு.க வோ ஏதும் கூறாததால் இப்படியொரு கேள்வி கேட்கத் தோன்றுவது இயல்புதான்.

இருப்பினும் முதல்வர் கலைஞர் மீது எனக்கு நம்பிக்கையுண்டு. அவர் பெற்றுள்ள தமிழாற்றல், இதுவரை தமிழ் வளர்ச்சி வரலாற்றில், அதுவும் கடந்த அரை நூற்றாண்டளவில் தமிழ் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மேடுபள்ளங்களை அறிந்து, உணர்ந்து, தெளிந்து செயல்படுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தென்றல்

“அறிவியல் தமிழின் விடிவெள்ளி”

https://www.tamilonline.com/thendral/article.aspx?aid=15320

தினமணி

கலைச்சொற்களை உருவாக்கியவர்

https://www.dinamani.com/lifestyle/lifestyle-news/2017/feb/12/10-
%E0%AE%B2%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%AE%E0%AF%8D-
%E0%AE%95%E0%AE%B2%E0%AF%88%E0%AE%9A%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%
8A%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%88-
%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%
8D-
%E0%AE%89%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%95%E0%AF%8
D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D-
2648273.html

(MMSTFT)

அறிவியல் தமிழ் மெய்நிகர் இருக்கைத் திட்டம்

https://scientifictamil.org/

அருஞ்சொல்

https://www.arunchol.com/pudhumadam-jaffar-ali-article-on-manavai-mustafa

மணவை முஸ்தபா
அறிவியல் தமிழ் முன்னோடி

புதுமடம் ஜாஃபர் அலி



தமிழ் மீது அளப்பரிய பற்றுகொண்டிருந்த மணவை முஸ்தபா, நவீன அறிவியல் போன்ற துறைகளிலும் தமிழ் தடம் பதிக்க வேண்டும் என்ற அக்கறையோடு செயல்பட்ட அரிதான ஆளுமை. அறிவியல் தமிழ்த் தந்தை. அறிவியல் தமிழ் தொடர்பாக இவர் ஆற்றிய பங்கு அளப்பரியது.

பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியத்தைத் தமிழில் கொண்டுவருவதற்கான குழுவைத் தலைமையேற்று வழிநடத்தியவர் மணவை முஸ்தபா. சோவியத் ஒன்றிய அரசு 'யுனெஸ்கோ கூரியர்' இதழைத் தமிழில் கொண்டுவந்தபோது, அதன் ஆசிரியராக 35 ஆண்டுகள் செயல்பட்டவர். அறிவியலும் தொழில்நுட்பமும் சார்ந்த கலைச்சொல் அகராதிகளைக் கொண்டுவந்தது இவருடைய மிக முக்கியமான பங்களிப்பாகும். அறிவியல் தமிழ் அறக்கட்டளை தொடங்கினார். அறிவியல் தமிழ் கருத்தரங்கை முதன்முதலில் நடத்தினார்.

தமிழே மூச்சாக, தமிழே வாழ்க்கையாக வாழ்ந்த மணவை முஸ்தபா 2017 பிப்ரவரி 6 அன்று காலமானார். அதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்ஸ் பொங்கல் விழாவிற்குச் சென்றபோது இவருடைய உடல்நலம் நலிவுற்றது. வாத நோயோடு தமிழ்நாடு திரும்பினார். இந்தக் காலகட்டத்தில் அவருடன் இருந்த அவரின் இளைய மகன் மருத்துவர் செம்மல் தன்னுடைய தந்தையின் இறுதிக் கால உணர்ச்சிமிகு தருணங்கள் சிலவற்றை நம்மிடம் பகிர்ந்துகொண்டார். தமிழ் மீது மணவை

முஸ்தபா கொண்டிருந்த பற்றை இந்தத் தருணங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

மணவை முஸ்தபா
அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

https://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-62.htm

01.	அண்ணலாரும் அறிவியலும்
02.	அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் - final part
03.	அறிவியல் தமிழின் விடிவெள்ளி
04.	அறிவியல், தொழில்நுட்ப கலைச்சொல் களஞ்சிய அகராதி
05.	அன்றாட வாழ்வில் அழகுதமிழ்
06.	இளைஞர் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்
07.	இளையர் அறிவியல் களஞ்சியம்
08.	இன்றைய தென்னக இலக்கியப் போக்கு
09.	இஸ்லாம்-ஆன்மீக மார்க்கமா? அறிவியல் மார்க்கமா?
10.	இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்
11.	கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி
12.	கணினி களஞ்சிய அகராதி 2
13.	கணினி களஞ்சிய பேரகராதி-1(computer encyclopedic tamil dictionary-1)
14.	கணினி களஞ்சிய பேரகராதி-2(computer encyclopedic tamil dictionary-2)
15.	காலம் தேடும் தமிழ்
16.	சமண, பௌத்த, கிருஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்கள்
17.	சிந்தைக்கினிய சீறா

18.	சிறுவர் கலைக் களஞ்சியம்
19.	சிறுவர்க்குச் சுதந்திரம்
20.	செம்மொழி உள்ளும் புறமும்
21.	தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம்
22.	தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்
23.	தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்
24.	திருப்புமுனை
25.	தெளிவு பிறந்தது
26.	பிறசமயக் கண்ணோட்டம்
27.	மருத்துவ கலைச்சொல் களஞ்சியம்
28.	மருத்துவ களஞ்சிய பேரகராதி
29.	விழா தந்த விழிப்பு

இலக்கிய வாழ்க்கை

மணவை முஸ்தபா, அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், கணினியியல் சார்ந்து பல நூல்களை எழுதினார். மணப்பாறை என்பதன் சுருக்கமான 'மணவை' என்பதைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டு எழுதினார். மொழிபெயர்ப்பாளராகவும், தொகுப்பாசிரியராகவும் செயல்பட்டார். அகராதிகளை, கலைக்களஞ்சியங்களை உருவாக்கினார். கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி, செம்மொழி களஞ்சிய பேரகராதி, செம்மொழி உள்ளும் புறமும், மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம், அறிவியல் தொழில்நுட்ப கலைச்சொல் களஞ்சிய அகராதி எனப் பல நூல்களை எழுதினார்.

இஸ்லாமிய இலக்கியத்திற்கும் மணவை முஸ்தபா முக்கியப் பங்காற்றினார், 'தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்', 'பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்', 'இஸ்லாம் ஆன்மீக மார்க்கமா? அறிவியல் மார்க்கமா?', 'இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்'

போன்ற தலைப்புகளில் பல நூல்களை எழுதினார். மணவை முஸ்தபா எழுதிய 'இளைஞர் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்' நூல் அவரது முக்கிய சாதனையாக மதிப்பிடப்படுகிறது. மலேசிய அரசியலமைப்புச் சட்டத்தைத் தமிழில் தந்தார். வானொலிக்காகவும் தொலைக்காட்சிக்காகவும் பல நாடகங்களை எழுதினார்.

சிறார் இலக்கியம்

மணவை முஸ்தபா, சிறுவர்களுக்காக நிறைய எழுதினார். நிறைய தொகுப்பு நூல்களை உருவாக்கினார். 'சிறுவர் கலைக்களஞ்சியம்' நூல் அவற்றில் குறிப்பிடத்தகுந்த ஒன்று.

இலக்கிய இடம்

மணவை முஸ்தபா, தமிழின் அறிவியல் சிறப்பை, செழுமையை வெளிக்கொணர்வதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டார். கலைக்களஞ்சிய உருவாக்கம், அகராதித் தயாரிப்பு எனத் தமிழின் மொழியின் வளர்ச்சிக்காக உழைத்தார். பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தை தமிழுக்குக் கொண்டு வந்தது மணவை முஸ்தபாவின் முதன்மையான சாதனை. மணவை முஸ்தபா உருவாக்கி அளித்த 'கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி' கணினித் தமிழுக்கு மிக முக்கியமான கொடை என்று ஆய்வாளர்களால் கூறப்படுகிறது. அரசு செய்ய வேண்டிய வேலைகளை தனியொரு மனிதனாகச் செய்தவராக ஆய்வாளர்களால் மதிக்கப்படுகிறார் மணவை முஸ்தபா. அகராதிகளும், கலைக்களஞ்சியமும் உருவாக்கிய தனி நபர்களில் முதன்மையானவராக மணவை முஸ்தபா மதிப்பிடப்படுகிறார்.

விருதுகள்

- தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சிறந்த நூலுக்கான முதல் பரிசு - மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம் நூல் (1996).
- தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சிறந்த நூலுக்கான இரண்டாம் பரிசு - இஸ்லாமும் சமய நல்லிணக்கமும் நூல் (1996).

- அனந்தாச்சாரி ஃபவுண்டேஷன் ஆஃப் இந்தியா வழங்கிய முதல் பரிசு - அறிவியல் தொழில் நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி நூல்.
- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பரிசு - கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி நூல்.
- அறிவியல் தமிழ்த் தந்தை விருது
- அறிவியல் கலைச் சொல் தந்தை விருது
- அறிவியல் தமிழ் கலைசொல் வேந்தர் விருது
- அறிவியல் செல்வம் விருது
- அறிவியல் களஞ்சியம் விருது
- அறிவியல் தமிழேறு விருது
- அறிவியல் தமிழ்ச் சிற்பி விருது
- அறிவியல் தமிழ் வித்தகர் விருது
- தமிழக அரசின் திரு.வி.க. விருது
- தமிழக அரசின் கலைமாமணி விருது
- சிகாகோ தமிழ் மன்றம் வழங்கிய அறிவியல் தமிழருவி விருது
- முத்தமிழ் வித்தகர் விருது
- மாமனிதர் விருது
- சீறாச் செல்வர் விருது
- பாலம் கலியாணசுந்தரனாரின் அன்புப் பாலம் அமைப்பு வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது
- ஈரோடு மக்கள் சிந்தனை பேரவை வழங்கிய பாரதி விருது
- உலகத் தமிழர் பேரமைப்பு வழங்கிய உலகப் பெருந்தமிழர் விருது
- தமிழ் வாகைச் செம்மல் விருது
- பண்பாட்டு காப்பாளர் விருது
- இளையான்குடி டாக்டர் ஜாஹீர் உசேன் கல்லூரி அறிவியல் மன்றம் வழங்கிய வளர் தமிழ்ச் செம்மல் விருது
- கரந்தை தமிழ்ச்சங்கம் வழங்கிய உமா மகேசுவரனார் விருது
- கணினி கலைச் சொல் வேந்தர் விருது
- ராஜா சர் முத்தையா செட்டியார் விருது
- ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டு சிறப்பு விருது
- முகம் இதழ் வழங்கிய சாதனையாளர் விருது
- தமிழேந்தி விருது
- காஞ்சி காமகோடி பீடம் வழங்கிய சேவா ரத்னா விருது
- செம்மொழிச் செம்மல் விருது
- செம்மொழிக் காவலர் விருது
- இயல் செல்வம் விருது
- சான்றோர் விருது
- ஆதித்தனார் முத்தமிழ் பேரவை வழங்கிய ஆதித்தனார் விருது
- எம்ஜி.ஆர். விருது
- முரசொலி அறக்கட்டளை வழங்கிய கலைஞர் விருது
- திராவிடர் கழகம் வழங்கிய தந்தை பெரியார் விருது
- மூப்பனார் விருது

- தமிழ்நாடு கூட்டுறவு வங்கி அதிகாரிகள் வழங்கிய தமிழ்த் தூதுவர் பட்டம்
- புகழ் பதிந்த தமிழர் பட்டம்

பொறுப்புகள்

- தமிழ்நாடு அரசின் அறிவியல் தமிழ் மன்றத் தலைவர்
- செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவன உறுப்பினர்
- தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர்
- தமிழ் வளர்ச்சித்துறை ஆலோசகர்
- என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா களஞ்சியம் தமிழ்ப் பதிப்பின் பொறுப்பாசிரியர்
- அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்க இணைச் செயலாளர்
- சர்வதேசத் தமிழ் ஆராய்ச்சி பேரவையின் இந்தியக் குழுவின் இணைச் செயலாளர்
- திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினர்
- பாரதிய ஞானபீடப் பரிசு தேர்வுக்குழு உறுப்பினர்
- தமிழ் எழுத்துச் சீர்திருத்த இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்
- அறிவியல் தமிழ் அறக்கட்டளையின் நிறுவனர்.

விகடன்

https://www.vikatan.com/news/miscellaneous/80031-manavai-mustafas-legacy-will-live-forever

மணவை முஸ்தபா

தமிழ் உள்ள காலம் வரை வாழும் நின் புகழ்!

உலகின் தொன்ம மொழிகளில் ஒன்று தமிழ். இயற்கையான வளமும் இலக்கணச் செழுமையும் மிகுந்த இம்மொழி பல்வேறு மொழிகளுக்குத் தாயாக இருக்கிறது. பிற மனிதக் குழுக்கள் சிந்திக்கப் பழகும் முன்பே, தமிழர்கள் தங்கள் மொழியால் வானத்தை அளந்தார்கள். பிரபஞ்சத்தின் சக்திகளை வார்த்தைகளால் காட்சியாக்கினார்கள். உலக மொழி வல்லுநர்கள் எல்லாம் தமிழின்

ஆழத்தை, அற்புதத்தை சிலாகித்துக் கொண்டிருக்கும் காலக்கட்டத்தில் தமிழர்கள் அதன் மகத்துவத்தை மறந்து பல தலைமுறைகள் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். மருத்துவமோ, பொறியியலோ, அறிவியலோ படிக்கத் தகுதியற்ற மொழி என்று தம் தாய்மொழிக்கு முத்திரை குத்திவிட்டு வேறு திசையில் சென்று கொண்டிருக்கிறது இளைய தலைமுறை. இப்படியான காலக்கட்டத்தில், தமிழின் அறிவியல் சிறப்பை, செழுமையை வெளிக்கொண்டு வருவதிலேயே தம் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட மணவை முஸ்தபாவின் மரணம், உண்மையில் பேரிழப்பு.

ஒரு மொழியின் சிறப்பே அதன் அறிவியல் தன்மை தான். வேறெந்த மொழிகளுக்கும் இல்லாத அறிவியல் தன்மை தமிழில் தளும்ப நிறைந்திருக்கிறது. கடும் ஆராய்ச்சிகள் மூலமும், களத்தேடல்கள் மூலமும் அவற்றை வெளிக்கொண்டு வந்து உலகத்தின் பார்வைக்கு வைத்து அங்கீகாரமும் பெற்றுத்தந்தவர் முஸ்தபா. காலத்துக்கு ஏற்றவாறு தன்னை தகவமைத்துக் கொள்ளாத மொழி நீடிக்காது. தமிழின் வளமையைப் புதுப்பிக்க அவ்வப்போது காலம் அறிஞர்களை உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கிறது. அப்படியான ஒரு மாண்புமிகு உயிர்ப்பு தான் முஸ்தபா. தமிழை செம்மொழியாக்க வேண்டும் என்ற குரல் பொதுத்தன்மையை எட்டி வலுவடைய பின்னணியாக இருந்தவர் இவர். வெறும் வார்த்தைகளாக இல்லாமல், தீவிர ஆய்வுகள் மூலம் அதன் செம்மொழித்தன்மையை நிரூபிக்கவும் துணை நின்றவர். யுனெஸ்கோவில் இருந்து ஏராளமான தரவுகளைக் கொண்டு வந்து தொகுத்து மத்திய அரசுக்கு அளித்தார். சுமார் 4.4 கோடி சொற்களைக் கொண்ட பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தை தமிழுக்குக் கொண்டு வர அயராது உழைத்தவர். மொழியின் ஜீவன், கலைச்சொற்களில் தான் இருக்கின்றன. புதிது புதிதாக சொற்களை உருவாக்கும் அதே வேளையில், வட்டாரங்களில் தூய்மைத்தன்மையோடு இருக்கும் வார்த்தைகளையும் தேடியெடுத்து, தூசிதட்டி பரவலாக்க வேண்டும். அந்த இரண்டு பணிகளையும் நேர்த்தியாகச் செய்தார் முஸ்தபா.

உலகத்தைப் புரட்டிப் போட்ட கணினிப் புரட்சி, தமிழுக்கு மாபெரும் சவாலாக நின்றபோது, அதை இலகுவாக்கி மொழிக்குள் அடக்கிய பெருமையும் முஸ்தபாவுக்கு உண்டு. "கணினி கலைச்சொல்

களஞ்சிய அகராதி" என்ற அவரது பெரும் பங்களிப்பு, தமிழுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றுத் தந்தது. கூகுள் போன்ற தேடல் இணையதளங்கள் அந்தக் களஞ்சியத்தில் இருந்தே தமிழ் மொழிக்கான வார்த்தைகளை எடுத்தாள்கின்றன. கணினி களஞ்சிய பேரகராதி, மருத்துவக் களஞ்சிய பேரகராதி, அறிவியல் கலைச்சொல் களஞ்சியம், அறிவியல் தொழில்நுட்ப கலைச்சொல் களஞ்சிய அகராதி, மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம் போன்ற கலைச்சொல் அகராதிகள் தமிழுக்கு அவர் அளித்த பெரும் கொடைகள். தம் வாழ்நாளில் சுமார் 8.5 லட்சம் கலைச்சொற்களை உருவாக்கியிருக்கிறார் முஸ்தபா. அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் இருந்தாலே ஒழிய ஒரு தனி மனிதருக்கு இது சாத்தியமில்லை.

நமக்கு அருகிலே இருக்கும் இலங்கையில் மருத்துவமும், பொறியியலும் தமிழில் வழங்கப்படும் நிலையில், இன்னும் நாம் அதற்கான சில படிகளைக் கூட கடக்காமல் இருக்கிறோம். அதற்கென உருவாக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகமும் ஆழ்ந்து உறங்குகிறது. தட்டுத்தடுமாறி பொறியியலில் தமிழ்வழியைக் கொண்டு வந்தபோதும், அதை மாணவர்களும் பெற்றோரும் நம்பத் தயாரில்லை. அண்ணா பல்கலைக்கழகத்தில் படிக்க ஆசைப்பட்டு, வேறு ஆங்கில வழிப்படிப்புகள் கிடைக்காத நிலையில் தான் அதை தேர்வுசெய்கிறார்கள். அந்த வகுப்பறையிலும் தமிழ்வழி என்பது பெயருக்குத் தான். ஆசிரியர்களில் குரலில் ஒலிப்பதென்னவோ ஆங்கிலம் தான்.

வெறும் இலக்கியங்களால் மட்டுமே சிலாகித்து விட்டு அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் மொழியைப் புறம்தள்ளுவது கண்டு மனம் வெதும்பினார் முஸ்தபா. ஒரு அரசு செய்ய வேண்டிய வேலைகளை தனியொரு மனிதனாக முன்னின்று செய்தார். தமிழில் அறிவியல் எழுத்தை, சிந்தனையை வெகுவாக ஊக்கப்படுத்தினார். இளம் எழுத்தாளர்களை எழுதத்தூண்டினார். அனைத்து அறிவியல் தமிழ் எழுத்தாளர்களையும் ஒருங்கிணைத்து, அறிவியல் தமிழ் கருத்தரங்குகளை நடத்தினார். மொழியைக் கையாள்வதில் எந்த சந்தேகம் தோன்றினாலும் இளம் எழுத்தாளர்கள் தட்டுவது முஸ்தபா

வீட்டுக் கதவைத் தான். எந்த நேரத்திலும் எதைப்பற்றியும் பேசலாம் அவரிடம்.

முஸ்தபாவின் சொந்த ஊர் மணப்பாறை அருகில் உள்ள இளங்காகுறிச்சி. திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பட்டப்படிப்பையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உயர் படிப்புகளையும் முடித்தார். மனைவி பெயர் சவுதா. அண்ணல், செம்மல் என்ற 2 மகன்களும், தேன்மொழி என்ற மகளும் இருக்கிறார்கள். இஸ்லாம் மீது பிடிப்பு கொண்ட முஸ்தபா, அதில் உள்ள அறிவியல் தன்மை, சமூக நல்லிணக்கம் தொடர்பாக பல ஆராய்ச்சி நூல்களையும் எழுதியிருக்கிறார். தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம், இஸ்லாம் ஆன்மீக மார்க்கமா? அறிவியல் மார்க்கமா?, இஸ்லாமும் சமய நல்லிணக்கமும், அண்ணலாரும் அறிவியலும், சமண பௌத்த கிருஸ்துவ இஸ்லாமிய இலக்கியங்கள், தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள், சிந்தைக்கினிய சீறா, இளைஞர் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் போன்ற நூல்கள் அவரின் பங்களிப்புகளில் பிரதானமானவை.

யுனெஸ்கோ நிறுவனம், தமது அதிகாரப்பூர்வ செய்தி ஏடாகிய "யுனெஸ்கோ கூரியர்" இதழை தமிழில் கொண்டு வர முனைப்புடன் செயல்பட்டவர் முஸ்தபா. மத்திய அரசு, வழக்கம்போல ஒரு பிராந்திய மொழிக்கு அப்படியான முக்கியத்துவம் கிடைக்கக்கூடாது என்று பல தடைகளை உருவாக்கிய போது, தமிழக அரசியல் தலைவர்களை ஒருங்கிணைத்து, மத்திய அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தினார். அதன் விளைவாக, இந்தியாவில் ஒரே பிராந்திய மொழியாக தமிழில் தம் இதழைக் கொண்டு வந்தது யுனெஸ்கோ. அந்த இதழுக்கு ஆசிரியராக முஸ்தபாவே நியமிக்கப்பட்டார். 1967 முதல் அந்த இதழ் நிறுத்தப்பட்ட காலம் வரை அவரே ஆசிரியராக இருந்து இதழை வழிநடத்தியதோடு, அதை முற்றுமுழுதாக தமிழ் மொழியின் வளத்தை மேம்படுத்தும் வகையிலேயே நடத்தினார். தமிழ் பண்பாட்டு சிறப்பிதழாக ஒரு இதழைக் கொண்டு வந்தார்.

கலைமாமணி உள்பட பல விருதுகள், அங்கீகாரங்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. சர்வதேச அளவிலும் அவர் பல வகைகளில் கொண்டாடப்பட்டிருக்கிறார். அவரது நூல்கள் நாட்டுடமை

ஆக்கப்பட்டுள்ளன. வாழ்ந்த காலத்திலேயே அவருக்குச் செய்யப்பட்ட நல் மரியாதை அது. உடல் நலம் நலிவுற்ற காலத்தில், நூல்களுக்காக அரசு வழங்கிய 10 லட்சம் ரூபாய் பெரும் உதவியாக இருந்தது.

முஸ்தபாவிடம் இருந்த தனித்தன்மை, அவர் மிகச்சிறந்த மொழி ஆராய்ச்சியாளராக, தமிழ் மீது பிடிப்பு கொண்டவராக இருந்தபோதும், தம்மொழியை சிறப்பிப்பதற்காக எக்காலத்திலும் அவர் பிற மொழிகளைப் பழித்ததில்லை. அவற்றின் மேன்மையை குறைத்துப் பேசியதோ, எழுதியதோ இல்லை. இஸ்லாம் மீது அவருக்கு பிடிப்பு இருந்தபோதும் பிற மதங்களின் மீது அவருக்கு சிறிதும் காழ்ப்புணர்வு இருந்ததில்லை. மதங்களுக்கு இடையிலான பொதுமைகளை மையமாக்கியதே அவருடைய ஆன்மிகம். சிறுவர்களுக்காக நிறைய எழுதினார். நிறைய தொகுப்பு நூல்களை உருவாக்கினார். சிறுவர் கலைக்களஞ்சியம், சிறுவர்க்கும் சுதந்திரம் போன்ற நூல்கள் குறிப்பிடத்தகுந்தவை.

மணவை முஸ்தபா தம் தாய்மொழிக்குச் செய்திருப்பது மிகப்பெரும் பங்களிப்பு. தமிழுள்ள காலம் வரை, அதன் அணிகலன்களாக அவை நிலைத்திருக்கும்.


-வெ.நீலகண்டன்

இந்து தமிழ் திசை

https://www.hindutamil.in/news/blogs/226100-10.html

மணவை முஸ்தபா

அறிவியல் தமிழ் அறிஞர்



ராஜலட்சுமி சிவலிங்கம்

அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியவரும் 'அறிவியல் தமிழ்த் தந்தை' எனப் போற்றப்படுபவருமான மணவை முஸ்தபா (Manavai Mustafa) பிறந்த தினம் இன்று (ஜூன் 15). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகில் உள்ள பிலார் கிராமத்தில் பிறந்தவர் (1935). பள்ளிப்படிப்புக்குப் பிறகு திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார். பாண்டிச்சேரி வானொலி நிலைய அறிவியல் நிகழ்ச்சி ஆலோசகராகப் பணியாற்றினார்.

* பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியத்தைத் தமிழில் கொண்டு வந்த குழுவுக்குத் தலைமை ஏற்றார். 'யுனெஸ்கோ கூரியர்' இதழைத் தமிழில் வெளியிடுவதில் தீவிர முயற்சி செய்து, 35 ஆண்டுகள் அதன் ஆசிரியராகச் செயல்பட்டார். 1977 முதல் 1986 வரை திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினராகப் பணியாற்றினார்.

* தமிழ் அறிவியல் கருத்தரங்கை 1986-ல் முதன்முதலில் சென்னையில் நடத்தினார். அறிவியல், தொழில்நுட்பம், கணினி துறைச் சார்ந்த 8 கலைச்சொல் அகராதிகளை வெளியிட்டார்.

* அறிவியல் தமிழ் அறக்கட்டளை என்ற நிறுவனத்தைத் தொடங்கி, அறிவியல் தமிழ் பணியாற்றி வந்தார். தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் நிர்வாக இயக்குநராக 40 ஆண்டுகள் பணியாற்றினார். தமிழ்நாடு அரசு உயர்கல்வி - தமிழ் ஆக்கப் பணிக்குழு உறுப்பினராகச் செயல்பட்டார்.

* அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்க இணைச் செயலாளர், சர்வதேசத் தமிழ் ஆராய்ச்சி பேரவையின் இந்தியக் குழுவின் இணைச் செயலாளர்,

பாரதிய ஞானபீடப் பரிசு தேர்வுக்குழு உறுப்பினர், எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத் தமிழ் வளர்ச்சித்துறை ஆலோசகர், தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர், செம்மொழி தமிழாய்வு நிறுவன சென்னை உறுப்பினர் என பல்வேறு முக்கியப் பொறுப்புகள் வகித்தவர்.

* இவர் எழுதிய 'இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்' என்ற நூலுக்குத் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூல்களுக்கான இரண்டாம் பரிசும், 'மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்' என்ற நூலுக்கு சிறந்த நூல்களின் சிறப்பு வெளியீடுகள் என்ற வகைப்பாட்டில் முதல் பரிசும் கிடைத்தது.

* கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி, செம்மொழி களஞ்சிய பேரகராதி, செம்மொழி உள்ளும் புறமும், தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம், அறிவியல் தொழில்நுட்ப கலைச்சொல் களஞ்சிய அகராதி ஆகிய இவரது நூல்கள் குறிப்பிடத்தக்கவை.


* மேலும் மாதிரி லட்சாதிபதி, ஜெர்மானிய இந்திய இயல் அன்றும் இன்றும், புதிய கண்டுபிடிப்புகளின் வரலாறு உள்ளிட்ட பல மொழிபெயர்ப்பு நூல்களைப் படைத்துள்ளார். சிறப்பு சிறுகதைகள், அறிவியல் செய்தி பரிமாற்றம், காசிம் புலவர் திருப்புகழ் உள்ளிட்ட நூல்களைத் தொகுத்து வெளியிட்டார். கூகுளில் பயன்படுத்தப்படும் கணினித் தமிழ் சொற்களைத் தந்தவர் இவர்தான். தம் வாழ்நாளில் சுமார் 8.5 லட்சம் கலைச்சொற்களை உருவாக்கியிருக்கிறார்.

* கலைமாமணி, திரு.வி.க விருது, தமிழ் தூதுவர், வளர்தமிழ்ச் செல்வர், அறிவியல் தமிழ் வித்தகர் விருது, ராஜா சர் முத்தையா செட்டியார் விருது, சிகாகோ தமிழ் மன்றத்தின் சேவா ரத்னா விருது உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட பட்டங்களும் விருதுகளும் பெற்றுள்ளார்.

* 'அறிவியல் தமிழ்ச் சிற்பி' என்ற பெருமைக்குரியவரும் வாழ்நாள் முழுவதும் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவருமான மணவை முஸ்தபா 2017-ம் ஆண்டு 82-வது வயதில் மறைந்தார்.


நிறைவு
மண்டபம்,




மணவை முஸ்தபா
கணினி
கலைச்சொல்
களஞ்சிய
அகராதி
viruba.com
மணவை பப்ளிகேஷன்

தமிழ் வளர்ச்சித் துறை

https://tamilvalarchithurai.tn.gov.in/13850/manavai-mustafa-piranthanaal-vizha/

அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா பிறந்தநாள் அரசு விழாவாக நடைபெற்றது.









அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் பிறந்தநாளினை அரசு விழாவாக 19.06.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறையில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் அறிவியல் தமிழ் கருத்தரங்கம், அறிவியல் தமிழ் வினாடி-வினா போட்டி மற்றும் அறிவியல் தமிழ் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.

https://kaninitamil.wordpress.com/2017/02/11/manavai-mustafa/

மணவை முஸ்தபா
அறிவியல் தமிழின் பிதாமகன்

tshrinivasan / பிப்ரவரி 11, 2017

தமிழகம் உலகுக்கு வழங்கிய சிறந்த அறிஞர்களில் ஒருவரான மணவை முஸ்தபாவின் மறைவு தமிழ் அறிவுலகத்துக்கு மிகப் பெரும் இழப்பு. தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத்தர உலகஅளவில் நிர்ப்பந்தம் கொடுத்த போராளிகளில் ஒருவர், அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், கணினித் துறை என நவீனத் தமிழுக்கு எட்டு கலைச்சொல் அகராதிகளை மகுடமாகச் சூட்டியவர் என்று பல சாதனைகளை நிகழ்த்தியவர் அவர்.

'பிரித்தானிக்கா' கலைக் களஞ்சியத்தைத் தமிழுக்குக் கொண்டுவரும் பணியும் அவரது தலைமையில்தான் நடந்தது. ஆங்கிலத்தின் முதல் அகராதியைக் கொண்டுவந்த சாமுவேல் ஜான்சன் தொடர்ச்சியாக ஐந்தாறு நாட்கள் உணவு, உறக்கமின்றி உழைப்பார் என்று சொல்வார்கள். மணவை முஸ்தபாவுக்கும் அது பொருந்தும். பல நாட்களுக்கு ஓய்வே எடுத்துக்கொள்ளாமல் உழைத்தவர் முஸ்தபா.

தமிழில் யுனெஸ்கோ கூரியர்

1966-ல் பாரீஸில் மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு தொடங்கி பல உலகத் தமிழ் மாநாடுகளிலும் அறிவியல் தமிழ் குறித்து அவரது ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன. பாரீஸ் மாநாட்டை நடத்திட 'யுனெஸ்கோ' உதவியது. அன்று யுனெஸ்கோவின் தலைமை இயக்குநராக இருந்தவர் மால்கம் ஆதிசேஷையா. அந்த மாநாட்டில் 53 நாடுகளில் இருந்து தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டதைக் கண்டு அதிசயித்த யுனெஸ்கோ, தமிழில் தனியாக யுனெஸ்கோ கூரியர் இதழ் தொடங்க முடிவுசெய்தது.

எனினும், தமிழ் இந்திய ஆட்சிமொழி அல்ல; இந்திய பிராந்திய மொழிகளில் ஒன்று என்பதால் யுனெஸ்கோ கூரியரைத் தமிழில் தொடங்க மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை. யுனெஸ் கோவின் உறுப்பினராக இருந்த முஸ்தபா, முதலமைச்சர் அண்ணாவைச் சந்தித்து நிலைமையை விளக்கினார். அண்ணாவின் நிர்ப்பந்தத்தைத் தொடர்ந்து, யுனெஸ்கோ கூரியரை இந்தியிலும் நடத்தினால் ஒப்புக்கொள்வோம் என்று லால் பகதூர் சாஸ்திரி அரசு அறிவித்தது. இதழின் ஆசிரியரைத்

தேர்ந்தெடுக்கும் பொறுப்பு 'டெக்கான் ஹெரால்டு' இதழின் ஆசிரியர் கிருபாநிதியிடமும், மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரத்திடமும் விடப்பட்டது. மணவை முஸ்தாவையே ஆசிரியராகத் தேர்வுசெய்தது அந்தக் குழு. 1967-ல் தமிழில் யுனெஸ்கோ கூரியர் வெளியானது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் தவிர, அரபி, சீனம் ஆகிய செம்மொழிகளில் மட்டுமே வெளிவந்த யுனெஸ்கோ கூரியர் இதழ், தமிழில் வெளிவந்தது என்பது தமிழுக்கான செம்மொழிப் போராட்டத்தின் உலகளாவிய நிகழ்வாகப் பதிவு செய்யத்தக்கது. மணவை முஸ்தபா ஆசிரியராக இருந்தபோது தமிழ்ப் பதிப்பு 5 லட்சம் பிரதிகள் விற்று யுனெஸ்கோ இதழ்களில் நான்காம் இடத்தை பிடித்திருந்தது.

ஒவ்வொரு கட்டுரையையும் மிகச் சிறந்த ஒளிப்படங்களுடன், நேர்த்தியான தமிழில் மொழிபெயர்த்துத் தர வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை செலுத்தினார். ஏற்கனவே அறிவியல் தமிழ் எனும் தனித்துறையை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தாலும், யுனெஸ்கோ தமிழ்ப் பதிப்பிலும் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கினார். 35 ஆண்டுகள் கழித்து நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி யுனெஸ்கோ தமிழ் இதழ் நிறுத்தப்பட்டது வரை அதன் ஆசிரியராக அவரே தொடர்ந்தார். 1984-ல் தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பிதழாக வெளிவந்த இதழ் உலகம் போற்றும் உன்னதப் படைப்பு!

கலைச்சொல் அறிஞர்

அறிவியல் தமிழில் எழுதுபவர்கள் எல்லோரிடத்திலும் தொடர்பில் இருந்தவர் மணவை முஸ்தபா. தனது பெரும் முயற்சியால் 'அறிவியல் தொழில்நுட்பக் கருத்துப் பரிமாற்றம்' எனும் பெயரில் முதன்முதலாக நடந்த அறிவியல் தமிழ்க் கருத்தரங்கை நடத்திக்காட்டினார். 15 நாட்கள் நடந்த அந்தக் கருத்தரங்கை ஒரு பயிற்சிப் பட்டறை போலவே நடத்தினார். மருத்துவம், இயற்பியல், தொழில்நுட்பம், வாகன இயல் என, உயிர்க்காப்பு மருந்து முதல் உதிரிப் பாகங்கள் வரை எல்லாவற்றுக்குமே தமிழ்ப் பெயர்கள் இருக்க வேண்டும் எனும் பேராவல் கொண்டவர்.

தமிழின் அறிவியலுக்கு அவர் தந்த 'மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்', 'அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி' ஆகிய இரு பிரம்மாண்ட படைப்புகளை துணையாகக்கொண்டே கடந்த 25 ஆண்டுகளாகப் பள்ளிக் கல்வித் துறையின் தமிழ்ப் பயிற்று மொழி சார்ந்த ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான நூல்களை ஆசிரியர்கள் உருவாக்கிவந்துள்ளனர். 'கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி'யும் அவரது அபார உழைப்பில் விளைந்த பொக்கிஷம். இன்றும்

கூகுள் பயன்படுத்தும் ‘தேடல்’, ‘துழாவி’, ‘உள்நுழைக’ போன்ற பதங்கள் அவர் நமக்களித்த கொடைகள்தான்!

1985-ல் கலைமாமணி விருது வழங்கப்பட்டபோதும், 1987-ல் சிந்தனை யாளர் கழகம் சார்பில் அறிவியல் தமிழ் சிற்பி விருது வழங்கப்பட்டபோதும் அவர் வழங்கிய ஏற்புரைகளில் பிரதானமாக இருந்தது ‘தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து தரப்பட வேண்டும்’ என்பதுதான். தமிழின் பெருமைகளையே உயர்த்திப் பேசிய அவர் அதற்காக வேறு எந்த இந்திய மொழியையும் மட்டம் தட்டிப் பேசியதில்லை.

மிஷெயில் ஹார்ட் எனும் அமெரிக்க விண்வெளி இயற்பியலாளர் எழுதிய ‘தி100’ எனும் நூலை தமிழில் (‘100 பேர்’) கொண்டுவந்தவர் மணவை முஸ்தபா. இதற்காக மிஷெயில் ஹார்டை நேரில் சந்தித்து தமிழ்ப் பதிப்புக்காகத் தனி முன்னுரை பெற்று வெளியிட்டார். அடுத்த இரண்டாண்டுகளில் ஹார்ட் அந்த நூலை சில மாற்றங்களுடன் மீண்டும் கொண்டுவந்தபோது, அதே மாற்றங்களைத் தமிழில் ஏற்படுத்தி அடுத்த பதிப்பைக் கொண்டுவந்தார். ஒரு மொழிபெயர்ப்பு நூலை எப்படிக் கொண்டுவர வேண்டும் என்பதற்கான பாடம் இது!

திண்டுக்கல்லில் ஒரு சாதாரண விவ சாயக் குடும்பத்தில் பிறந்து தன்னையும் தமிழையும் உயர்த்திய மணவை முஸ்தபா இன்று இல்லை என்று நினைக்கவும் நம்பவும் மனம் மறுக்கிறது. ‘இந்த இதழ் விரைவில் வந்து விட வேண்டும்; விரைவில் நிறைவு செய்யலாம்’ என்று இன்னமும் அவர் சொல்வது போலவே இருக்கிறது. தமிழ் இன்று செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டு தனக்கான தனி இடத்தைப் பிடித்துள்ளது. அதன் பின்னணியில் அவரது அர்ப்பணிப்பு மிக்க உழைப்பும் இருக்கிறது.

ஊடகத் துறை நண்பர் சொன்ன ஒரு தகவல் இது. இஸ்லாமியரான அவர் தனது நிலைப்பாடுகளையும் மாறுபாடுகளையும் மறந்து வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது பாஜகவின் அப்போதைய தமிழ் மாநிலத் தலைவர் இல. கணேசனைச் சந்தித்து ஒரு வேண்டுகோள் விடுத்தார்: “தமிழ்நாட்டில் பாஜக வெற்றி பெற வேண்டும் என நீங்கள் விரும்பினால், தமிழ்மொழியைச் செம்மொழி என்று அறிவித்தால் போதும்.” தமிழ் மீது எத்தனைக் காதல் இருந்தால் இப்படி ஒரு கோரிக்கையை அவர் முன்வைத்திருப்பார்! தமிழுக்கு உலக அரங்கில் அந்தஸ்தைப் பெற்றுத்தந்த பெருமையோடு அவர் மறைந்துவிட்டார். எனினும், தமிழிலேயே பொறியியல், மருத்துவக் கல்வி எனும் அவரது கனவை நனவாக்குவதுதான் அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி!

THE HINDU


Manavai Mustafa,
Editor of UNESCO Courier is no more

https://www.thehindu.com/news/national/tamil-nadu/Manavai-Mustafa-editor-of-UNESCO-Courier-is-no-more/article17206238.ece

Published – February 07, 2017 12:57 am IST – CHENNAI
SPECIAL CORRESPONDENT

Manavai Mustafa, who was the editor of UNESCO Courier Tamil magazine till it was folded up and who contributed immensely to the creation of Tamil glossary, died here on Monday. He was suffering from Parkinson's disease for 10 years. He was 85 and is survived by his wife, two sons and a daughter.

He has published eight glossaries on computers, medicine, and science and technology, and translated many books from English to Tamil including the history of the Indian National Army.



https://ta.wikisource.org/wiki/%E0%AE%85%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B5
%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B2%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%A

E%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%BF

பொருளடக்கம்



முன்னுரை

இன்றைய இளைய தலைமுறையின் வலுவான மன வளர்ச்சியே நாளைய நாட்டின் வலுவான சக்தி.

இளம் உள்ளங்களில் நாட்டுப் பற்று கடமை உணர்வு ஆகியவற்றை அழுத்தமாகப் பதிய வைக்க வேண்டியது அவசியம். அப்போதுதான் அவர்கள் தேசீய உணர்வு மிக்கவர்களாக விளங்க முடியும். தேசீய ஒருமைப்பாட்டுடன் ஒற்றுமையாக வாழ முனைவார்கள்.

சுதந்திரத்தின் உண்மைப் பொருளை இளம் வயதிலேயே உணர்த்த வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் தாங்கள் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிப்பதோடு மற்றவர்களின் சுதந்திரத்தையும் மதித்து நடப்பார்கள் இதனால் நாட்டு நலன் மட்டும் அல்லாது சர்வதேச நலனே பாதுகாக்கப்படும். இந்த உண்மையை இளம் உள்ளங்கள் ஏற்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்நூல்.

அனைத்திந்திய வானொலி சென்னை நிலைய சிறுவர் நிகழச்சியில் ஒலிபரப்பபபடடதே இன்று நூலுருப் பெற்றுள்ளது.

எனது பிற நூல்களை ஏற்றது போன்றே இந்நூலையும் வாசகர்கள் ஏற்பார்கள் என நம்புகிறேன்.

அன்பர்
மணவை முஸ்தபா
ஆசிரியர்

கோமதிக்கு ஒருபுறம் குதூகலம்; மறுபுறம் ஒரே பரபரப்பு. அன்று சுதந்திரநாள். பள்ளியில் தேசியக் கொடியேற்று விழா நடைபெற விருந்தது. சற்று முன்னதாகவே செல்ல விரும்பினாள். அதற்காக விரைந்து குளித்தாள். புத்தாடை அணிந்தாள். தன்னை முழுமையாக அழகுபடுத்திக் கொண்டாள். விழாவுக்குப் புறப்பட்டாள். அவள் தம்பி ரகுவும் புறப்படத் தயாரானான். ஆனால் மற்றொரு தம்பி மணி? இன்னும் தயாரானதாகத் தெரியவில்லை. அவனையும் அங்கே காணோம்.

கோமதி வீடெங்கும் மணியைத் தேடினாள். எங்கும் காணோம். வீட்டின் பின்கட்டுக்குச் சென்றாள். அங்கே அவன் இருந்தான். சாவதானமாக விளையாடிக் கொண்டிருந்தான். இன்னும் குளிக்கவில்லை. புது உடை உடுத்த வில்லை. கொடியேற்று விழாவுக்குப் புறப்படுபவன்போல் தோன்றவில்லை.

இவர்களைத் தேடிக்கொண்டு ரகு அங்கே வந்தான். அவன் அலங்காரம் 'அவன் தயார்' என்பதைக் காட்டியது. மணியை நெருங்கினாள் கோமதி. "என்னடா, மணி! இன்னும் நீ புறப்படவில்லையா? இன்றைக்குச் சுதந்திர தினம் என்பதுகூட மறந்துவிட்டதா? கொடியேற்று விழாவுக்கு நாம் போக வேண்டாமா? இதோ, ரகுகூட தயாராகி விட்டான் பார்!"

கோமதி கூறியது எதையும் கேட்க விரும்பாதவன் போல் விளையாடிக் கொண்டிருந்தான். தான் பேசியதை ரகு சட்டை செய்ததாகத் தெரியவில்லை. இதைக் காண கோமதிக்குக் கோபம் வந்தது.

இதற்குள் அங்கு வந்தான் ரகு.

"என்ன, மணி! பள்ளிக்கு இன்னும் புறப்படலையா? ஏழு மணிக்கே மாணவர்கள் எல்லோரும் பள்ளி வரணும்'னு தலைமையாசிரியர் சொல்லியிருக்காரே. இப்போ, மணி ஆறு ஆகுது. இன்னும் நீ குளிச்சு, டிரஸ் செய்யாமல் நிக்கிறே! என்னிக்கும்போல இன்னிக்கும் நீ 'தாமதத் திலகம்' தானா?" கூறிச் சிரித்தான் ரகு.

ரகு சிரித்தது மணிக்குப் பிடிக்கவில்லை. எரிச்சலாக இருந்தது. அதற்கேற்ப முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டிருந்தான் மணி. கோமதி மீண்டும் கேட்டாள்:

"எப்பவுமே வகுப்புக்குப் பிந்தியே வருவே. இன்னிக்கு சுதந்திர தின விழா. இதற்காவது கொஞ்சம் முந்திப் போகக் கூடாதா? இன்னும் குளிக்காம கூட விளையாடிட்டிருக்கியே?"

கோமதியை நோக்கி நிமிர்ந்து பார்த்தான். தன் குரலைச் சற்று உயர்த்திப் பேசினான்:

"ஆமாம். இன்னிக்குக் குளிக்கப் போவதில்லை. சுதந்திர தின விழாவுக்கும் வரப் போவதில்லை."

மணி தன் முடிவை உறுதியாகக் கூறினான்.

இவன் கூறிய பதில் ரகுவுக்கு வியப்பாக இருந்தது. காரணம் தெரிந்து கொள்ள விரும்பினான்.

"என்னடா, மணி! ஏன் இந்த சத்தியாக்கிரகம்?"

"இன்னிக்குச் சுதந்திர தினம் தானே?" அசட்டையாகக் கேட்டான், மணி.

"அதில் என்னடா உனக்குச் சந்தேகம்? இன்று 'சுதந்திர தினம்' தான்." வேகமாகப் பதில் கூறினாள் கோமதி. "அவங்கவங்க சுதந்திரமா இருப்பதுதானே சுதந்திரம்! தினசரி தவறாம பள்ளிக்கூடம் போறோம். பள்ளிக்குப் போகும் வரைக்கும் வீட்டில் ஒரே கெடுபிடி. குளி! சாப்பிடு!'ன்னு அம்மாவின் ஒரே அதட்டல். 'வீட்டுப் பாடத்தைப் படி, கணக்கைப் போடு'ன்னு அப்பாவின் மிரட்டல். ஒரு நிமிடம்கூட சும்மா இருக்கவிடாம உயிரை வாங்குறாங்க."

"பள்ளிக்கூடம் போனால் அங்கே ஆசிரியரின் கெடுபிடி. 'அதைப் படி, இதை எழுது'ன்னு பிழிஞ்சு எடுக்கிறார். சுருக்கமா சொன்னால் வீட்டிலேயும் விடுதலை இல்லை; பள்ளிக்கூடத்திலும் சுதந்திரம் இல்லை. இரண்டு இடத்திலும் ஆட்டிப் படைக்கிறாங்க. அடிமையாய் நடத்தறாங்க. நம்ம இஷ்டத்துக்கு நடக்க முடியலே. விருப்பத்துக்கு வெளியே போக முடியலே. வெளியிலே சுற்றவோ, விளையாடவோ விடறதில்லே. சுதந்திர தினமான இன்னிக்காவது வழக்கமான வேலை எதுவும் நான் செய்யப் போறதில்லை. என் இஷ்டப்படி திரிந்து விளையாடப் போறேன்!"

தன் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டினான் மணி. சுதந்திரத்துக்கு அவன் கொண்டிருந்த பொருள் வேறாக இருந்தது, அவன் விழாவுக்கு வராமல் அடம்பிடிப்பது கோமதிக்குச் சங்கடமாக இருந்தது. "அப்போ, நீ இன்னிக்கு விழாவுக்கு வரப் போவதில்லையா, மணி?"

சற்று அதட்டலாகவே கேட்டாள் அக்காள் கோமதி.

"என்ன பெரிய விழா? கொடியேத்தறதும் பேசறதும்தானே! தேசிய கீதம் முடியறவரைக்கும் இருந்தால் ஒரு சாக்லேட் கிடைக்கும்! சாக்லேட் வாங்கித் தின்ன, நீங்க வேண்டுமானால் போங்க. நான் வரலே."

அவன் பிடிவாதமாகவும் கிண்டலாகவும் கூறினான். இது ரகுவுக்கும் கோமதிக்கும் வேதனையாக இருந்தது. என்ன சமாதானம் கூறி அழைத்துச் செல்வது என்றும் அவர்கட்குப் புலப்படவில்லை.

இந்தச் சமயத்தில் அவர்கள் மாமா அங்கே வந்தார். வயதானவர். நன்கு படித்தவர். வரும் போதெல்லாம் ஏதாவது தின்பண்டங்கள் வாங்கி வருவார். வேடிக்கையாகப் பேசுவார். கதைகளெல்லாம் சொல்லுவார். அதனால் மணி உட்பட, அவரை எல்லோருக்கும் பிடிக்கும்.

கோமதி, ரகு, மணி மூவரும் ஒன்றாக இருப்பதைப் பார்த்தார். வந்து கொண்டே கேட்டார்: “எல்லோரும் எங்கே புறப்பட்டுட்டிருக்கீங்க?”

மாமாவின் கேள்விக்கு கோமதி பதில் சொன்னாள்:

“இன்னிக்கு எங்க பள்ளிக்கூடத்திலே சுதந்திர தின விழா. அதுக்காக நானும் ரகுவும் போய்க் கொண்டிருக்கோம். மணியைக் கூப்பிட்டா வரமாட்டேன்’ங்கிறான். அதுக்கு வேறே ஏதேதோ காரணங்கள் சொல்றான். நீங்களாவது சொல்லி விழாவுக்கு வரச் சொல்லுங்க, மாமா.”

கோமதியைத் தொடர்ந்து ரகு பேசினான்:

“ஒரு சாக்லேட்டுக்காக நீங்க வேணும்னா விழாவுக்குப் போங்க'ன்னு கேலி பேசுறான், மாமா."

மணியின் மறுப்பு மாமாவுக்கும் விந்தையாக இருந்தது.

“ஏன்'டா, மணி! சுதந்திர தின விழா மதிப்பே ஒரு சாக்லேட் தான்'னு நினைச்சுட்டியா?”

மாமா சிரித்துக்கொண்டே கேட்டார்.

“சுதந்திர தின விழாவிலே மிட்டாய் தானே மாமா தர்றாங்க. அதைத்தான் சொன்னேன்.” மணியின் பதில் மாமாவுக்கு வேடிக்கையாக இருந்தது.

“உண்மைதான், மணி,. ஆனால் மிட்டாய் எப்போ கொடுக்கிறாங்க?”

மாமா வினயமாய் மணியைக் கேட்டார்.

“விழா முடியறப்போ, கொடுப்பாங்க!”

மணி உடனே பதில் சொன்னான்.

“அதுக்கு முன்னாலே என்ன என்ன நிகழ்ச்சிகள் நடக்கும்?” மாமா கேட்டார்.

இதற்குப் பதில் சொல்ல கோமதி முந்திக் கொண்டாள்.

“முதல்’லே கொடி ஏற்றுவாங்க. அப்புறம் சுதந்திர தினவிழா நோக்கம் பற்றி பேசுவாங்க, அதன்பிறகு தேசியகீதம் பாடப்படும். கடைசியாக எல்லோருக்கும் இனிப்புத் தருவாங்க.”

கோமதியின் பதில் மாமாவுக்குத் திருப்தியாக இருந்தது. தொடர்ந்து அவர் கேள்வி கேட்டார்:

“சுதந்திர தினம், குடியரசு நாட்களில் கொடி ஏற்றி விழா கொண்டாடறோம். அப்போ, கொடி வணக்கம் செய்யறோம். அவ் வணக்கம் ஏன் செய்யறோம்’னு தெரியுமா?”

ரகு பதில் சொல்ல முன்வந்தான்.

“நம் நாட்டு தேசியக் கொடியை ஏற்றி வணங்கினால் அது நம் நாட்டையே, பாரதத் தாயையே வணங்கியது போலாகும்.”

சரியாகப் பதில் கூறிய ரகுவின் முதுகில் செல்லமாகத் தட்டிப் பாராட்டினர், மாமா. எதையோ நினைத்துக் கொண்டவன்போல் தொடர்ந்து சொன்னான் :

“பாரதியார் ‘கொடி வணக்கப் பாடல்’ எழுதியிருக்கார். அதிலேகூட “தாயின் மணிக்கொடி பாரீர்!” என்றுதான் எழுதியிருக்கிறார், மாமா.”

“உண்மைதான், ரகு. நம் பாரத மாதாவே கொடி உருவத்தில் இருக்கிறதாக நம்புறோம். அதனாலே தேசியக் கொடியைப் போற்றி வணங்குகிறோம். நம் தேசியக் கொடியை வணங்கினா, அது அன்னை பாரத மாதாவையும் நாட்டையும் வணங்கியதாக ஆகும்.” மாமா விளக்கமாகக் கூறிமுடித்தார்.

“அப்படியானால், நம் நாட்டின் மிக உயர்ந்த சின்னம் தேசியக் கொடிதானா மாமா?” தெளிவாக அறிந்து கொள்ள கோமதி கேள்வி எழுப்பினாள்.

“அதிலென்ன சந்தேகம், கோமதி? அதனாலேதான் தேசியக் கொடியை நம் நாட்டின் சின்னமாகவே வச்சிருக்காங்க. அதை பயபக்தியுடனும் மரியாதையுடனும் கையாள வேண்டும். இதற்கென தனி ஒழுங்கு முறை உண்டு. அதன் படிதான் தேசியக் கொடியைக் கையாளவேண்டும்.

மாமாவைத் தொடர்ந்து ரகு பேசினான்:

“எங்க பள்ளிக்கூடத்தில் கூட இதைப் பற்றியெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்காங்க, மாமா. காலையில் கொடியை, எப்படி ஏத்தனும், மாலையில் எப்படி இறக்கணும்’னு சொல்லிக் கொடுத் திருக்காங்க.”

ரகு கூறி முடித்ததும் கோமதி சொன்னாள்:

“அதோட, எந்த எந்த சமயங்கள்’லே தேசியக் கொடியைப் பயன்படுத்தலாம்’னும் சொல்லியிருக்காங்க.”

இருவர் கூறியதையும் ஆமோதித்த மாமா மேலும் சொன்னார்.

“நம் தேசியக் கொடி நம் நாட்டின் மிக உயர்ந்த சின்னம். அதற்கு நாம் எல்லோரும்

சிறந்த மரியாதை காட்ட வேண்டும். அது நம் அனைவரின் இன்றியமையாக் கடமை. மேலும், நம் தேசியக் கொடி நம் மக்களின் ஒற்றுமை, தூய்மை, அகிம்சை ஆகியவற்றின் சின்னமாகத் திகழ்கிறது…”

மாமா முடிக்கும்முன் ரகு பேசினான்:

“சென்ற ஆண்டு சுதந்திர தின விழாவின் போது கொடியேற்றி வைத்த தலைமையாசிரியர் கூட இதையேதான் சொன்னார், மாமா.”

மாமா தொடர்ந்து விளக்கினார்:

“கொடியேற்று விழாவின் நோக்கமும் இது தான். அப்போது தேசியக் கொடியின் சிறப்பு விளக்கப்பட வேண்டும். இக் கொடியைப் பெற, நாட்டுக்கு உழைத்தவர்கள் போற்றப்பட வேண்டும். நாட்டு விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள், பொருளை இழந்தவர்கள், சுக வாழ்வைத் துறந்து சிறை சென்ற தியாகிகள் அனைவரும் நினைவுகூரப்பட வேண்டும். தேசியக் கொடியைக் காக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் நாட்டின் சுதந்திரச் சின்னமே நம் தேசியக் கொடிதான்” என்று விரிவாக விளக்கிச் சொன்னார் மாமா.

“தேசிய கீதமும் அப்படித்தானே, மாமா?” கோமதி தன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள முயன்றாள்.

“ஆமாம், கோமதி தேசியக் கொடியை ஏற்றும்போது நாம் எழுந்து நின்று வணக்கம் செலுத்த வேண்டும். அதைப் போல தேசிய கீதம் இசைக்கப்படும்போது எல்லோரும் எழுந்து நிற்கவேண்டும். தக்கபடி வணங்கி மரியாதை செலுத்த வேண்டும். தேசிய கீதம் பாடுகிறவரோடு சேர்ந்து நாமும் பாட வேண்டும். இப்படிச் செய்ய வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை யாகும்.”

“அப்படீன்னா, நம்ம மணிக்கு அந்தக் கடமையுணர்ச்சி இல்லை என்று சொல்றீங்களா மாமா?”

குத்தலாகக் கேட்டான் ரகு.

மாமா சொல்வதற்கு முன்பு கோமதி பேசினாள்:

“அவனுக்கு நாட்டுப் பற்றுமில்லை; கடமை உணர்ச்சியுமில்லை. இவை இரண்டும் அவனுக்கு இருந்திருந்தா சுதந்திர தின விழாவுக்கு வர மாட்டேன் என்று சொல்வானா? சுதந்திரமா ஊர் சுற்றி விளையாடப் போறேன்’னு அடம் பிடிப்பானா?”

கோமதியின் பேச்சு மணியை சீண்டுவது போல் இருந்தது. அவன் கோமதியை வெறுப்போடு பார்த்தான். அவன் முகத்தில் வருத்தமும் ஏக்கமும் மாறி மாறி தோன்றின. நிலைமையை ஒரளவு புரிந்து கொண்ட மாமா மேலும் விளக்க முயன்றார்.

“சுதந்திரம்’னா’ எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் தான்தோன்றித் தனமாக அலைவது’ என்று தவறாக நினைத்திருக்கிறான், மணி. இந்த நாளை நாம் ஏன் சுதந்திர தினம்’னு சொல்றோம்?”

மாமாவின் கேள்விக்கு ரகு பதில் கூற முற்பட்டான்.

“இது எல்லோருக்கும் தெரிந்ததுதானே, மாமா! நம் நாட்டை வெள்ளையர் அடிமைப்படுத்தி ஆண்டாங்க. அவர்களிடமிருந்து விடுதலை பெற நீண்ட நாள் போராடி, சுதந்திரம் வாங்கினோம். நம்மை நாமே ஆள உரிமை பெற்ற அந்த நாளைத்தான் ஆண்டுதோறும் கொடியேற்றிக் கொண்டாடுகிறோம்.”

விடுதலை வரலாற்றை சுருக்கமாகக் கூறி முடித்தான் ரகு.

“சரியாகச் சொன்னாய் ரகு. பெற்ற இந்த உரிமையைப் பேணிக் காக்கணும். இதற்காக அவரவர் கடமையைத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்தக் கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் நம் சுதந்திரம் நிலைக்கும்.”

மாமா கூறியது கோமதிக்குச் சரியாகப் புரியவில்லை. அவள் தலையைச் சொறிந்தபடி “கொஞ்சம் புரியும்படியாகச் சொல்லுங்க, மாமா” என்று கேட்டுக் கொண்டாள். அவரும் தொடர்ந்து விளக்கிச் சொல்லலானார்.

“அதாவது, நம்மை அடிமைப்படுத்தியிருந்த வெள்ளைக்காரர்களிடமிருந்து போராடினோம். அதன் விளைவாக நம்மை நாமே ஆண்டு கொள்ள உரிமை பெற்றோம், இல்லையா? இந்த உரிமை மீண்டும் பறிபோகாமல் இருக்கவேண்டும். அதற்காக நமக்குள்ள கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் நம்ம உரிமை நிலைக்கும். நாமும் என்றென்றும் சுதந்திர மக்களாக இருக்க முடியும். அப்போது தான் நம் நாடும் முன்னேற முடியும்.”

இன்னும் ரகுவுக்குச் சந்தேகம் முழுக்கத் தீர்ந்தபாடில்லை.

“நமக்குள்ள கடமைகளைச் செய்தால் நாம் மட்டும் தானே, மாமா, முன்னேற முடியும்? அது எப்படி நாட்டு முன்னேற்றமாகும்.”

ரகுவின் கேள்வி மாமாவுக்கு மேலும் உற்சாகம் தந்தது. ஆர்வத்தோடு அவர் பதில் சொல்லலானார்.

“ரகு! நாமெல்லாம் சேர்ந்ததுதானே, நாடு. நாம ஒவ்வொருவருடைய முன்னேற்றமும் ஒன்று சேரும்போது, அது நாட்டு முன்னேற்றமாகி விடுகிறது.”

"அப்போ, நாம கடமை தவறினா அது நமக்கு மட்டுமல்லாமல், நாட்டுக்கே தீங்காயிடும், இல்லே, மாமா?”

தான் தெளிவாகப் புரிந்து கொண்டதைச் சரிபார்த்தாள் கோமதி.

“சரியாகச் சொன்னாய், கோமதி. உங்களைப் போன்ற படிக்கிற மாணவர்க்கென்று பல கடமைகள் இருக்கு. அதுபோல பெரியவர்களுக்கென்று பல கடமைகள் உண்டு. அவரவர் செய்யும் தொழிலைப் பொருத்து கடமையின் தன்மை வேறுபடும். “இந்தக் கடமைகளைச் செய்யும்போது அவர்களின் சுதந்திரம் பலவகையான கட்டுப் பாடுகளால் கட்டுப்படுத்தப்படுது. மூக்கணாம் கயிறு போடப்பட்ட மாடு முறையாக வேலை செய்யும். மூக்கணாம் கயிறு இல்லாத மாடு மக்கள் கூட்டத்துக்குள் ஓடினால் பலருக்கும் காயம் ஏற்படும். ஏன், உயிருக்குக் கூட ஆபத்து விளையும்.”

“தெருவிலே கைத்தடியைச் சுழற்றிச் செல்ல எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால், அதை மற்றவர்களின் மேல் படாமல் சுழற்றத் தான் உரிமையுண்டு.”

“எனவே, ஒவ்வொருவரும் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள கட்டுப்பாட்டோடு கூடிய கடமையைச் செய்ய வேண்டும்.”

“இப்போ, மணியை எடுத்துக் கொள்வோம். அவன் தன் கடமைகளை மறந்து விட்டான். வீட்டிலும் பள்ளியிலும் உள்ள கட்டுப்பாடுகளை வெறுக்கிறான். தனக்குள்ள சுதந்திரத்தைத் தவறான வழியிலே ஊர் சுற்றி விளையாடப் பயன்படுத்த விரும்புகிறான். இதற்காக அவன் வீட்டிலும் பள்ளியிலும் கண்டிக்கப்படுவான். ஏன், தண்டிக்கவும் படலாம் இல்லையா?” மாமா இவ்வாறு கூறியபோது மணி தன் தவறை உணர்ந்தவன்போல் காணப்பட்டான்.

“மன்னிக்கனும் மாமா. சுதந்திரம்’னா விருப்பப்படி நடக்கிறதுன்னு தப்பா நெனச்சுட்டேன். அதனாலே கடமை தவறி நடக்கப் போனேன். கடமையும் கட்டுப்பாடும்தான் நம் சுதந்திரத்தைக் காக்கும் கேடயங்கள். அதை இப்போ நன்றாக உணர்ந்துட்டேன். இனி ஒரு போதும் கடமை தவறி நடக்கமாட்டேன். இது உறுதி!”

மணி மன உறுதியோடு கூறிய வார்த்தைகள் மாமாவுக்கு மகிழ்ச்சியளித்தன. கோமதியும் ரகுவும் பூரிப்படைந்தனர்.

“நம் சுதந்திரத்தைக் காப்பது முக்கியம். அதைவிட பிறர் சுதந்திரத்தை மதித்துப் போற்றுவது மிகவும் அவசியம். பிறர் சுதந்திரத்தை நாம் பறித்தால், நம் சுதந்திரம் பறிபோய்விடும், இதை ஒரு கதையின் மூலம் சொல்றேன், கேளுங்கள்.”

மாமா கதை சொல்வதாகச் சொன்னதும் மூவரும் பேருவகை அடைந்தனர். மாமா சொல்லப் போகும் கதையைக் கேட்க மூவரும் தயாராயினர். ஆவலோடு அவர் முகத்தைப் பார்த்த னர். மாமா கனைத்துக் கொண்டு கதை சொல்லத் தொடங்கினார்.

“முன்பு ஒரு சமயம் காட்டுக் குதிரை ஒன்று இருந்தது. அது தான் மேய்வதற்கான பகமையான புல்தரையைத் தேடி அலைந்தது. காடு, மலை, வனாந்தரம் எங்கும் திரிந்தது. எங்கு சென்றும் பசுமையான புல்வெளியைக் காண முடியவில்லை.

இறுதியாக ஒரு பரந்த புல்வெளிப் பகுதிக்கு வந்தது. அது இரண்டு மலைகளுக்கிடையே அமைந்திருந்தது. அங்கே குதிரை எதிர்பார்த்த பசுமையான புற்கள் நிறைய இருந்தன. காண்பதற்குப் பச்சைப் பசேல் எனக்

காட்சியளித்தது. அப்புல்வெளியைச் சுற்றிலும் காடுகள் இருந்தன. அங்கு மனித நடமாட்டம் எதுவும் இல்லை.

யாருமே இல்லாத பரந்த புல்வெளி. தன்னந்தனியாக அக் காட்டுக் குதிரை மேயும். நல்ல வெயில் நேரமாக இருந்தால் தூரத்தில் இருந்த மரத்தடியில் இளைப்பாறும். அருகே ஆற்று ஒடை ஒடிக்கொண்டிருந்தது. தாகம் எடுத்த போதெல்லாம் அதில் சென்று தண்ணிர் குடித்துத் தாகத்தைப் போக்கிக் கொள்ளும். மீண்டும் புல்வெளியில் வந்து மேய்ந்து கொண்டிருக்கும்.

மனிதர்கள் மட்டும் அல்ல. வேறு எந்த மிருகமும் அங்கு வருவதே இல்லை. இது குதிரைக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. முழுச் சுதந்திரத்துடன் அப்புல்வெளியை அனுபவித்து வந்தது. தனக்காக என்றே கடவுள் படைத்த இடம் அது என எண்ணியது. அந்த இடத்தைத் தனது நிரந்தர இடமாக ஆக்கிக் கொண்டது. அந்த இடம் தனக்கு மட்டுமே சொந்தம் என எண்ணிப் பெருமைப்பட்டது. அந்த மகிழ்ச்சியில் அங்கும் இங்கும் ஒடும். துள்ளிக் குதித்து விளையாடும். அதற்கு எப்பவும் ஒரே மகிழ்ச்சி தான்.

ஒருநாள் அந்தக் குதிரைக்குத் தாகமாக இருந்தது. தூரத்தில் இருந்த ஓடைக்குத் தண்ணிர் குடிக்கச் சென்றது.

அந்தச் சமயத்தில் அவ்வழியாக ஒரு புள்ளி மான் ஓடி வந்தது. பசுமையான புல்வெளியைக் கண்டதும் மகிழ்ச்சியால் துள்ளியது. அதற்கு அப்போது மிகவும் பசியாக இருந்தது. பச்சைப் பசேல் எனக் காணப்பட்ட புற்களைக் கண்டபோது நாவில் நீர் ஊறியது. பசும்புல் என்றால் மான் விரும்பி உண்ணும். அதன் பசிக்கேற்ற சுவையான உணவு. மிகுந்த மகிழ்ச்சியோடும் ஆர்வத்தோடும் புல்லை மேய்ந்து கொண்டிருந்தது.

ஒடையில் தண்ணிர் குடித்துவிட்டு காட்டுக் குதிரை திரும்பியது. புல்வெளியில் மான் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டது. குதிரைக்குப் 'பகீர்' என்றது. தனக்குச் சொந்தமான புல் வெளியில் மான் மேய்வதா? குதிரைக்குக் கோபம் கோபமாய் வந்தது. தனது சுதந்திர வாழ்வுக்கு ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி வெகுண்டது.

மகிழ்ச்சியாக மேய்ந்து கொண்டிருந்த மானை நோக்கி நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்தது. பயங்கரமாகக் கனைத்தபடி மானிடம் சென்றது. கடுமையான குரலில் மானைப் பார்த்து "நீ யார்?" என்றது. "என் அனுமதி இல்லாமல் என் புல்வெளியில் எப்படி நீ நுழைய லாம்?" என்று கேட்டது. "எனக்குச் சொந்த மான புல்வெளியில் உன் இஷ்டப்படி மேய்வதா?

உடனே புல்வெளியை விட்டு வெளியேறி ஓடி விடு” என்று மானைப் பார்த்து கோபமாகக் கூறி விரட்டியது.

காட்டுக் குதிரை ஆத்திரமாகப் பேசியதைக் கேட்ட மானுக்குக் கோபம் வந்தது. என்றாலும், கோபத்தை அடக்கிக் கொண்டது. குதிரையைப் பார்த்து “இந்தப் புல்வெளி உனக்குச் சொந்தமா? எப்போதிருந்து? இது காட்டிலுள்ள புல்வெளி. இது உனக்குச் சொந்தம் என்றால் இது எனக்கும் சொந்தம்தான். உன்னைப் போல

நானும் காட்டில் வசிக்கிறேன். அதனால், இங்கு புல் மேய எனக்கும் உரிமை உண்டு,” என அஞ்சாமல் பதில் கூறியது.

மகிழ்ச்சியால் அங்கும் இங்கும் ஓடியது. கொழுந்தாக இருந்த பசும் புற்களை ஆர்வத்தோடு மேய்ந்தது.

மானின் வார்த்தைகள் குதிரைக்கு அறவே பிடிக்கவில்லை. அவை ஈட்டியாக அதன் மனதில் குத்தியது. இவ்வளவு பெரிய உடலைக் கொண்ட தன்னை, சின்னஞ்சிறு புள்ளிமான் எதிர்த்துப் பேசுவதா? இதை எண்ணியபோது அதன் மனம் குமுறியது. தனக்கு மாபெரும் அவமானமே ஏற்பட்டுவிட்டதாகக் கருதியது. மிகுந்த கோபத்தோடு மானை நெருங்கியது. மானைப் பார்த்து “ஏ! அற்ப மானே! எனக்குச் சொந்தமான புல்வெளியில் நுழைந்துள்ளாய். அத்துமீறி புல்லை மேய்ந்ததும் இல்லாமல், என்னையே எதிர்த்தா பேசுகிறாய்? உனக்குப் பாடம் புகட்டுகிறேன். பார்! உன்னை இங்கிருந்து விரட்டாமல் நான் விடப் போவதில்லை. இது உறுதி!” என ஆத்திரமாகச் சபதம் செய்தது. பின்னர் புல்வெளியைவிட்டு வேகமாக வெளியே எங்கோ ஓடியது.



குதிரை எங்கெங்கோ ஓடிக் களைத்தது. கடைசியாக மலையடிவாரம் வந்து நின்றது.

அங்கே ஒரு சிறிய வீடு இருந்தது. அந்த வீட்டில் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரைப் பார்த்த போது குதிரைக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்த மனிதரின் உதவியைக் கொண்டு புல்வெளி யிலிருந்து புள்ளிமானை விரட்ட எண்ணியது.

காட்டுக் குதிரை வீட்டை நெருங்கியது. அந்த வீட்டுக்காரனை கவலையோடு பார்த்தது. பின், தனக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தை விபரமாக விளக்கிக் கூறியது. எப்படியும் தனக்குச் சொந்தமான புல்வெளியில் புகுந்து மேயும் புள்ளி மானை அங்கிருந்து விரட்டியடிக்கும்படி கேட்டுக் கொண்டது.

அந்த மனிதன் குதிரையின் துன்பத்தைப் போக்க எண்ணினான். அத்துமீறி நுழைந்து புல் வெளியில் மேயும் புள்ளிமானை விரட்டியடிக்க அந்த மனிதன் சம்மதித்தான்.

அவனுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அவன் காட்டுக் குதிரையைப் பார்த்துக் கேட்டான்:

"நீ விரும்பியபடியே மானை விரட்டி விடலாம். ஆனால், மான் மிகவும் வேகமாக ஓடக் கூடியது. என்னால் அவ்வளவு வேகத்தில் ஒடி அதை விரட்ட முடியாது. ஆனால், உன்னால் மானைவிட வேகமாக ஓட முடியும். எனவே,

உன் முதுகில் ஒரு துணித் தலையணையைக் கட்டி, அதன்மேல் ஏறி அமர்ந்து கொள்கிறேன். நான் கீழே விழாமல் இருக்க உனக்குக் கடி வாளம் போட்டு அதைக் கையில் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன். நீ மானைப் பின் தொடர்ந்து வேகமாக ஒடு. அப்போது அதை நான் ஈட்டியால் குத்திக் கொன்று விடுவேன். மான் இறந்து போகும். பிறகு உனக்குப் போட் டியே இருக்காது. எப்போதும் நீயே அந்தப் பரந்த வெளியில் தங்கிக் கொள்ளலாம். அங் கிருக்கும் புல்லை மேய்ந்து கொண்டிருக்கலாம். என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

அந்த மனிதன் கூறிய யோசனை குதிரைக்குப் பிடித்திருந்தது. எப்படியாவது மானை விரட்டியடிக்க எண்ணியது. எனவே, சிறிதும் யோசிக்காது அதற்கு உடனடியாகச் சம்மதித்து விட்டது.

அந்த மனிதன் குதிரையின் முதுகில் தலையணை ஒன்றை வைத்து இறுகக் கட்டினான். கயிற்றால் அதற்குக் கடிவாளம் போட்டான் அதனை ஒரு கையில் கெட்டியாகப் பிடித்தபடி குதிரை மீது ஏறி அமர்ந்தான். மற்றொரு கையில் ஈட்டியைப் பிடித்துக் கொண்டான். மானை விரட்டப் புறப்பட்டான்.

மனிதன் முதுகில் அமர்ந்திருப்பது குதிரைக்குப் பாரமாக இருந்தது. இருந்தபோதிலும்

மானைப் புல்வெளியிலிருந்து விரட்டியடித்தே தீரவேண்டும் என உறுதி கொண்டது. பாரத்தால் ஏற்பட்ட முதுகு வலியையும் பொறுத்துக் கொண்டு ஓடியது. அந்த மனிதனும் ஈட்டியைச் சுழற்றியபடி குதிரைமேல் சவாரி செய்தான். அப்படிச் சவாரி செய்வது அவனுக்குச் சுகமாக இருந்தது.

ஈட்டியைச் சுழற்றியபடி மனிதன் வேகமாகக் குதிரைமேல் வந்தான். இதைக் கண்ட மான் பயத்தால் நடுங்கி வேகமாக எங்கோ ஓடி மறைந்துவிட்டது. புல்வெளியை விட்டே மானை விரட்டியடித்த மகிழ்ச்சி குதிரைக்கு ஏற்பட்டது. அளவு கடந்த சந்தோஷத்தால் துள்ளி ஓடியது.

இறுதியாகக் காட்டுக் குதிரை ஓரிடத்தில் நின்றது. காரியம் முடிந்த பின்னும் அந்த மனிதன் குதிரையைவிட்டு இறங்கவில்லை. குதிரை மேல் சவாரி செய்வது அவனுக்கு ஆனந்தமாக இருந்தது. நடந்து கஷ்டப்படாமல் எங்கும் விரைந்து செல்ல குதிரையை தகுந்த வாகனம் என்று எண்ணினான். எனவே, அவன் அக் குதிரையின் கடிவாளத்தையோ முதுகுமேல் உட்காருவதற்காக கட்டிய தலையணையையோ நீக்கவில்லை. மாறாகத் தன் வீட்டிற்குக் குதிரையை விரட்டியபடியே சவாரி செய்தான். தன் வீட்டின் முன்னால் இருந்த மரத்தில் குதிரையைக் கட்டிப் போட்டான்.

சுதந்திரமாக மேயவந்த புள்ளிமானை விரட்ட முற்பட்ட காட்டுக் குதிரை தனது சுதந்திரத்தையே இழந்து நின்றது. மனிதனுக்கு அடிமையாக உழைக்கும் 'வீட்டுக் குதிரை' ஆகி விட்டது. அன்று முதல் இன்று வரை வழிவழியாகக் குதிரைகள் மனிதர்களைச் சுமந்து திரிகின்றன. அவர்கள் ஏறிச் செல்லும் வண்டிகளை இழுத்துச் செல்லும் பிராணிகளாகவும் உழைத்து வருகின்றன.


பிறர் சுதந்திரத்தைப் பறிக்க முயன்றால் நம் சுதந்திரம் பறிபோய்விடும். பிறருக்குத் துன்பம் செய்ய முற்பட்டால் தங்களுக்கும் தங்கள் சந்ததிகளுக்கும் கூட அத்துன்பம் தொடரும். இந்த உண்மையையே 'காட்டுக் குதிரை' `வீட்டுக் குதிரை'யான செயல் உலகுக்கு இன்று வரை எடுத்துக்காட்டி வருகிறது.


மாமா கூறிய குதிரை-மான் கதையைக் கேட்ட சகோதரர்கள் மூவரும் மிகவும் மகிழ்ந்தனர். சுதந்திரத்தின் சிறப்பை உணர்ந்தனர். அதைக் காப்பதில் ஆர்வம் கொண்டனர். தங்கள் சுதந்திரத்தைப் போன்றே பிறர் சுதந்திரத்தையும் மதிக்கக் கற்றுக் கொண்டனர்.

புத்தாடை உடுத்தி, சுதந்திரம் பற்றிய புதிய சிந்தனையுடன் விடுதலை நாள் விழாவில் பங்கு கொள்ள, பள்ளி நோக்கி விரைந்து நடந்தனர். அதைக் காண மாமாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.





















காணொளிகள்

01] தமிழில் அறிவியல் - மணவை முஸ்தபா

https://www.youtube.com/watch?v=4iNmyELf6hk [23:52]

02] அறிவியல் தமிழின் சிறப்புகள் - அறிவியல் தமிழ்த்தந்தை மணவை முஸ்தபா எழுச்சி உரை - பாரிஸ் 1999ஆம் ஆண்டு
https://www.youtube.com/watch?v=jmlH8i7En2Q [1:01:33]

03] தெளிவு பிறந்தது | மணவை முஸ்தபா | சிறுவர் கதை | ஒலிப்புத்தகம்
https://www.youtube.com/watch?v=MmcgGY63cY4 [32:08]

04] ஆன்மீகத்தின் நரம்பியல் அடிப்படைகள்| Neurobiology of Religion | Dr Semmal Manavai Mustafa
https://www.youtube.com/watch?v=iMrvO-VllyY [1:16:33]

05] திருப்புமுனை // மணவை முஸ்தபா
https://www.youtube.com/watch?v=Zerugb8ryIY [1:00:13]

(😊)(😊) மணவை முஸ்தபா (😊)(😊)